
# ஜாமக்காரன்

WATCHMAN



VOLUME - 2 ISSUE - 7

*(ஜாமக்காரனில்) எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள். 1 தெச 5:21*

*ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான், ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி 2:15.*

0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com



**கர்த்தருக்குள் அன்பானவர்களே,**

**இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்.**

**கடந்த 6 மாதங்களில் பல்வேறு இடங்களில் நடந்த ஊழியங்கள் யாவும் மிகவும் ஆசீர்வாதமாக அமைந்தன.**

**சில மாதங்களாக அந்நியபாஷையைக்குறித்து தொடர் செய்தியாக ஜாமக்காரனில் வெளியிட்டு வருவது நீங்கள் அறிந்ததே!. அதனால் வேறு செய்திகளையோ, கேள்வி-பதில் பகுதியையோ வெளியிட முடியவில்லை. அந்நியபாஷை விவரம் எல்லா மக்களும் அறிந்து குறிப்பாக பெந்தேகோஸ்தே சபையில்உள்ள நமது வாசகர்கள் அறிந்து விழிப்புணர்வு பெற்று வசனத்துக்கு நேராக திரும்பவேண்டும் என்ற கர்த்தரின் வாஞ்சையும், அவர் கருவியாக உபயோகிக்கும் என்னுடைய வாஞ்சையும் நிறைவேறிக்கொண்டிருப்பதை அறிந்து தேவனை துதிக்கிறேன்.**

**‘ ஜாமக்காரனில் எழுதிய அந்நியபாஷை விவரத்தை வாசித்த பெந்தேகோஸ்தே சபையின் பாஸ்டர்களுக்குள்ளேயே பெரும் சர்சைகள் எழும்ப ஆரம்பித்துவிட்டது. தாங்கள் பேசும் அந்நியபாஷை பாஷையே அல்ல என்பதை பலர் உணர ஆரம்பித்து குற்ற உணர்வினால் தவிக்கிறார்கள். மெல்லவும்முடியாமல், விழுங்கவும்முடியாமல் என்ற பழமொழிபோல தாங்கள் தெளிவுபெற்ற விஷயத்தை தன் சபைமக்களிடம் கூறும்போது தாங்கள் பேசும்பாஷை உண்மையான பாஷைஅல்ல என்று கூறினால் சபைஉடைந்துவிடும். உண்மையை மறைத்தால் தேவகோபத்துக்கு ஆளாகநேரிடும் என்ற பெரும் குழப்பத்தில் இருக்கிறார்கள். ஆவியானவர்தான் பெந்தேகோஸ்தே சபை பாஸ்டர்களை இந்த இக்கட்டான நிலையிலிருந்து தைரியமாக வெளிவர, மனசாட்சியில் குற்றமற்றவர்களாக இருக்க, உண்மையை கூற, அவர்களுக்கு தைரியம் அளித்து சபைமக்களையும் ஜெபத்தில் உளருவதிலிருந்து காப்பாற்றவேண்டும்.**

**‘ அந்நியபாஷையைபற்றிபலர் எழுதிய புத்தகங்களை நீங்கள் வாசித்திருக்கலாம்.**

# ஜூலை 2016

ஆனால் பாஷைகள் **உருவாகி-ஜனங்கள் சிதறப்பட்ட** பழைய ஏற்பாட்டு காலம் தொடங்கி அப்போஸ்தலர்களின் காலத்தில் முதன்முறையாக **பரிசுத்த ஆவியானவர்** இறக்கப்பட்ட காலம்வரை உள்ள விளக்கத்தை வேதபாடம் சொல்லி கொடுப்பதைபோல வாசகர்களுக்கு விளக்க கர்த்தர் அருள் செய்தார். இப்படி ஒரு வேத பாடத்தை நாங்கள் எந்த புத்தகத்திலும் வாசித்ததில்லை என்றார்கள். அந்நியபாஷையின் அடிப்படை சத்தியத்தை ஜாமக்காரனில் எழுதும் இந்த ஆரம்ப நிலையிலேயே தெளிவுபெற்றவர்கள் ஏராளம் என்பதை அறியும்போது தேவனைத்துதிக்கிறேன். அவர்கள் எனக்கு எழுதிய கடிதங்களும், இ-மெயில்களும் ஏராளம். கர்த்தருக்கே மகிமை.

‘ ஆனால் அதே சமயம் பெந்தேகோஸ்தே சபை பாஸ்டர்கள் அனைவரும் என்மேல் மிகவும் கோபம்கொண்டுள்ளார்கள். **அந்நியபாஷை** பேசும் மேடை ஊழியர்களும், பிரசங்கிமார்களும் தங்களின் அந்நியபாஷை **வியாபாரம் படுத்துவிடுமோ** என்ற பயத்தில் என்னைக்குறித்து எச்சரிக்கை அறிவிப்பை வெளியரங்கமாகவே கூட்டத்திலும் சபையிலும் பேச ஆரம்பித்துவிட்டனர்.

‘ **டாக்டர்.புஷ்பராஜ்** அவர்கள் **பரிசுத்த ஆவியின் எதிரி** என்றும், **கள்ளஉபதேசி** என்றும், குற்றம் சுமத்தும் பிசாசின் ஆவியால் நிறைந்துள்ளார். ஆகவே அவரிடம் ஜாக்கிறதையாக இருங்கள் என்றும்கூறி, ஜாமக்காரனை யாரும் படிக்ககூடாது. ஜாமக்காரனுக்கு பண உதவி செய்பவர்கள் **ஆவியானவருக்கு எதிரான** ஊழியத்துக்கு உதவி செய்பவர்களாக கருதப்படுவார்கள் என்று எச்சரிக்கின்றனர். அதை நம்பிய சில குடும்பத்தினர் பயந்துகொண்டு எனக்கு அவ்விவரத்தை அறிவித்துள்ளார்கள். இப்படி இந்த ஊழியர்கள் பதறி பேசுவது நல்லஅடையாமாகும். ஜாமக்காரனில் வெளியிட்ட **அந்நியபாஷை கட்டுரை கிரியை செய்யஆரம்பித்துவிட்டது** என்பது இதன்மூலம் உறுதியாகிறது. மேலும் பெந்தேகோஸ்தே பாஸ்டர்கள் கைப்பட எனக்கு எழுதிய கடிதத்துக்கான பதிலை நேரிடையாக வசனத்தை சுட்டிக்காட்டி நான் பதில் எழுதிய எதற்கும் அவர்களால் பதில் ஏதும் கூறமுடியாமல் தவிக்கிறார்கள். எப்படியோ **குழப்பம்** ஒரு **தெளிவை** உண்டாக்கினால் அதுவே போதும். ‘ **அந்நியபாஷையைப்பற்றி** தொடந்து எழுதுவதை சேகரித்து பைண்ட் செய்து வைத்துக் கொள்ளுங்கள். நடுவில் ஜாமக்காரனின் எந்த மாத பத்திரிக்கையாவது உங்களுக்கு கிடைக்காமல் போயிருந்தால் அல்லது தபாலில் தவறியிருந்தால் உடனே மாதத்தை குறிப்பிட்டு அதை வாங்கி சேர்த்து வைத்துக்கொள்ளுங்கள்.

‘ ஜுன்-ஜுலை மாதங்களில் பெற்றோர் பிள்ளைகளின் படிப்பு செலவுக்காக லட்சக்கணக்கான ரூபாய்களை தேடி அலைந்தவர்கள் ஏராளம், அவர்களின் தேவைகளுக்காக விசேஷ ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. பணதேவைக்கான **நெருக்கடியிலிருந்து** நம் வாசகர்கள் கிருபையாக காப்பாற்றப்பட்டார்கள்.

ஜுன்-ஜுலை மாத **ஜாமக்காரனும்**, இந்த குறிப்பிட்ட இரண்டு மாத பண **நெருக்கடியிலிருந்து** கிருபையாக காப்பாற்றப்பட்டு **கடன் ஏதும்இன்றி** ஜாமக்காரனை தக்க சமயத்தில் வெளியிட கர்த்தர் கிருபை செய்தார். இந்த நெருக்கடி சூழ்நிலையில் ஆவியானவரால் உணர்த்தப்பட்டு பணம் அனுப்பி உதவிய அனைவருக்கும் நன்றி கூறுகிறேன். ஜீலை மாத ஜாமக்காரன் ஆகஸ்ட் மாதம் முதல் வாரத்தில்தான் கிடைக்கும். பெருத்துக்கொள்ளவும்.

I Believe that when I am at the end of my Strength, You will come my Lord Jesus and reveal your might. கர்த்தரின் நாமத்துக்கு மகிமை உண்டாவதாக.

கர்த்தரின் உன்னத பணியில் - ✍ **டாக்டர்.புஷ்பராஜ்**

# அந்நியபாஷை குழப்பம்

# அத்தியாயம் - 4

**பரிசுத்த ஆவியானவர் எப்போது மனிதனுக்குள் வருகிறார்?**

நான்கு மாதங்களாக **அந்நியபாஷை** சம்பந்தமான விளக்கங்கள். பெந்தேகோஸ்தே சபை TPM, AOG பாஸ்டர்கள் எனக்கு எழுதிய கடிதத்துக்கு விளக்கங்களை வசன அடிப்படையில் எழுதியதைக்குறித்து ஏராளமான பெந்தேகோஸ்தே சபைகளிலிருந்து புகழ்ந்தும்,இகழ்ந்தும் பலர் எழுதிய கடிதங்கள் எனக்கு வந்துக்கொண்டேயிருக்கிறது.

## பொய்

கடந்த மாதம் (ஜுன்)மாத ஜாமக்காரனில் AOG சபை (மதுரை) **பாஸ்டர்.ராஜாமணி** அவர்களின் கடிதத்துக்கு நான் பதில் அளிக்கும்போது பாஸ்டர்.ராஜாமணி அவர்கள் **பொய்** பேசிவிட்டார் என்று எழுதினேன். உண்மையில் இவ்வளவு பெரிய அனுபவமுள்ள வேதாகம கல்லூரி விரிவுரையாளர்(Proffeser) அவர்கள் **பொய்** பேசிவிட்டார் என்று எழுத நான் மிகவும் யோசித்தேன். மிகவும் மனவேதனையும் எனக்கு ஏற்பட்டது.

இதே அனுபவம் 1974ம் வருடம் சகோ.DGS.தினகரன் காருண்யா கல்லூரிக்கு பணம் சேர்க்க இளம்பங்காளர் திட்டம் ஒன்றை கர்த்தர் தன்னை பரலோகத்துக்கு அழைத்து சென்று தன்னிடம் அறிவித்தார் என்ற அவரின் அறிவிப்பு அவர் பேசிய **பொய்களின் உச்சம்** ஆகும்.

ஒவ்வொரு வீட்டில் பிறந்த குழந்தைகள் பெயரில் தலைக்கு 2000ரூபாய் வாங்கி அவர்களுக்காக விசேஷ ஜெபம் செய்யவேண்டும் என்று கர்த்தர் தன்னிடம் கூறினார் என்று ஒரு புளுகு புளுகினாரே அதை கேட்ட மக்கள் உலகெங்கும் உள்ளவர்கள் 2000ரூபாய் பணம் கொடுக்காத ஏழை பிள்ளைகளுக்கு யார் ஜெபம் செய்யவர்கள் என்ற கேள்வி கேட்டனர். அதற்கு அவர் அளித்த பதில் தவணைமுறையில் மாதம் 100 அல்லது 200 ரூபாய் கொடுத்தால் 2000 ரூபாய் சேர்ந்தவுடன் ஜெபிக்க ஆரம்பிப்பேன் என்பதாகும். இந்த பதிலை கேட்டவர்கள் குறிப்பாக அவர்மேல் பாசம் வைத்து தகப்பனைப்போல் நேசித்த அத்தனை மக்களையும் அவரின் பதில் ஒரு உலுக்கு உலுக்கிவிட்டது.

அதன்பிறகு தான் நான் வெளிப்படையாக அவரின் தவறை சுட்டிக்காட்டி எழுதினேன். அதோடு **சகோ.தினகரன்** அவர்களை என் நண்பர் என்றும் பாராமல், **சகோ.தினகரன்**

பேசியது நூற்றுக்கு நூறு பொய் ஆகும். ஆவியானவர் ஒருநாளும் ஜெபத்தை விற்கக சொல்லியிருக்க மாட்டார். சகோ.தினகரன் அவர்களை நம்பவேண்டாம் என்று துணிந்து ஜாமக்காரனில் எழுதினேன்.

**இயேசு அழைக்கிறார்** பெயரை நானும் சகோ.தினகரனும் இணைந்து ஈரோடு சிஎஸ்ஐ சபை மைதானத்தில் நடந்த கூட்டத்தின் மேடையில் அமர்ந்திருக்கும்போது இரகசியமாக அவர் கரத்தை என் கரத்தின்மேல் வைத்து **இயேசு அழைக்கிறார்** பெயரை ஊழியத்துகென்று முதன்முறையாக பிதா,குமாரன்,பரிசுத்தாவியின் நாமத்தில் பிரதிஷ்டை செய்தோம். அப்படிப்பட்டவரை வேறு வழியில்லாது மக்களை தெளியவைக்க அவர் கூறியது **பொய்.** அவர் **பரலோகம்** சென்றதாக கூறியது **பொய்** யோ (3:13) என்று சரமாரியாக சகோதரனை தாக்கி ஜாமக்காரனில் எழுதினேன்.

எனக்கும் அவருக்கும் பகையோ, கோபமோ,வெறுப்போ இல்லாத அந்த சூழ்நிலையில் என் வாசகர்களை விளங்கவைக்க வெளிப்படையாக **DGS பொய் பேசினார்** என்று நான் எழுத நேர்ந்தது. **ஜெபத்தை விலைக்கு விற்கும்** வியாபாரியாக மாறிய அன்றிலிருந்து **தேவ ஆவியானவர்** அவரை விட்டு நீங்கினார்.

## பாஸ்டர்.ராஜாமணி அவர்கள்

அதைப்போலவே AOG சபை பாஸ்டர்.ராஜாமணி அவர்கள் அப் 2ம் அதிகாரத்தில் சீஷர்கள் **பற்பல பாஷைகளில்** பேசினபோது அந்த இடத்தில் **அந்த பாஷையை அறிந்தவர்கள் எவருமே இல்லை** என்று இந்த வேத பண்டிதருக்கு அப்படி கூற எப்படி தைரியம் வந்தது?.

AOG சபையில் உள்ளவர்கள் சபை பாஸ்டர்மார்கள் அத்தனை பேர்களுக்கும், சவால்விட்டு கூறினேன். பாஸ்டர்.ராஜாமணி அவர்கள் கூறியது **பொய்யா? இல்லையா?** என்று கேட்டேன். இதுவரை ஒரு பாஸ்டர்களும் பதில் கூறவில்லை. பதில் கூறமுடியாது. அவர்கள் யாவரும் வெட்கி தலைகுனிந்து அமைதியானார்கள். அவைகளைக்குறித்து ஜாமக்காரனில் நான் எழுதி ஒரு மாதம் ஆகிறது. **கேரளா,ஆந்திரா,கர்நாடகா,தமிழ்நாடு** ஆகிய தென்னிந்திய பாகங்களிலிருந்து யாரும் நான் எழுதி கேட்டதற்கு பதில் அளிக்கவில்லை. பதில் அளிக்கவும் முடியாது.

அவர் அப்படி எழுதியது **அந்நியபாஷைக்கு** அர்த்தம் கேட்கக்கூடாது என்ற கருத்தை சபை மக்களிடம் திணிக்க அவர் பேசிய துணிகர **பொய்** ஆகும். பாஸ்டர்.ராஜாமணி அவர்கள் விஷயத்தில் இப்படி **பொய்** என்ற வார்த்தையை உபயோகித்து எழுதி விட்டோமே என்று ஆரம்பத்தில் மனவேதனையடைந்தேன். ஆனால் எனக்குள் உள்ள ஆவியானவர் தெளிவாக என்னை உணர்த்தீயதால் குற்றமற்ற மனசாட்சியுடன் அவர் கூறியதை கண்டித்து எழுதினேன்.

இப்போதும் கூறுகிறேன். பாஸ்டர்.ராஜாமணி அவர்கள் அப்படி கூறியது சரிதான் என்று கூறி **ஆதாரத்துடன்** யாராவது எழுதினால் அதை அப்படியே ஜாமக்காரனில் வெளியிடுவேன்.

வேதத்தில் இல்லாத **அந்நியபாஷைக்கு** அவர்கள் ஏன் இந்த அளவு வக்கீல்களைபோல வக்காலத்து வாங்குகிறார்கள் என்று தெரியவில்லை!.

' **அந்நியபாஷையைப்**பற்றி ஒரு வாசகர் இமெயிலில் இப்படி எழுதியுள்ளார். அதை பாடல்போல எழுதியுள்ளார்.

தந்தை பெர்க்மான் **அண்ணாச்சி** அந்நியபாஷையில் ஜெபிக்க சொன்னாக,
மோகன் சி.லாசரஸ் **அண்ணாச்சி** அந்நியபாஷையில் ஜெபிக்க சொன்னாக
வின்சென்ட் செல்வராஜ் **அண்ணாச்சி** அந்நியபாஷையில் ஜெபிக்க சொன்னாக
சாதுசெல்வராஜ் **அண்ணாச்சி** அந்நியபாஷையில் ஜெபிக்க சொன்னாக
சாம் ஜெபதுரை **அண்ணாச்சி** அந்நியபாஷையில் ஜெபிக்க சொன்னாக
ராபின்சன் **அண்ணாச்சி** அந்நியபாஷையில் ஜெபிக்க சொன்னாக
பாஸ்டர்.மோகன் **அண்ணாச்சி** அந்நியபாஷையில் ஜெபிக்க சொன்னாக இன்னும் பல அண்ணாச்சிமார் எல்லாம் **அந்நியபாஷையில்** ஜெபிக்க சொன்னாக,

ஆனால் நம் வேத புத்தகம் மட்டும் **அந்நியபாஷையில்** யாரையும் பேச சொல்லவில்லையே?. இந்த **அண்ணாச்சிமார்கள்** வேத வசனம் வாசித்தில்லையோ? என்று கேட்டு எழுதியுள்ளார்.

' வெளிப்படையான பல விஷயங்களை பெந்தேகோஸ்தே பாஸ்டர்களும், பொது மேடையில் அல்லது டிவியில் பேசும் ஊழியர்களும் மறந்துவிடுகிறார்கள்.

நம் எல்லாருடைய கைகளிலும் இருக்கும் இந்த வேதத்தை முதன்முதல் உலகத்தின் அனைத்து மொழிகளிலும் குறிப்பாக **தமிழ்நாட்டிலும் மொழி பெயர்த்த** அந்த தேவ மனிதர்களான அந்த மிஷனரிகள் யாரும் அந்நியபாஷையில் பேசவில்லையே?. **சீகன்பால்க்,வில்லயம்கேரி** இவர்கள் எல்லாரும் கஷ்டப்பட்டு வருடக்கணக்கில் மணலில் தங்கள் விரல்வைத்து தமிழ் அட்சரங்களை எழுதி விரலில் இரத்தம் பீறிட்டு வர தமிழ் மொழிகளை கற்றார்களே?

அதன்பின் தான் அந்த கடின சூழ்நிலையிலும், தாங்க முடியாத சீதோஷ்ண நிலையிலும் அவர்கள் நமக்கென்று நம் தமிழில் வேத புத்தகத்தை மொழி பெயர்த்து தந்தார்களே! அந்த **மிஷனரிகள் யாரும் அந்நியபாஷை** பேசவில்லையே. **ரிங்கல் தொபே,** போன்ற மிஷனரிகள் எந்த **அந்நியபாஷை** பேசினார்கள். பாஸ்டர்கள் கையில் பிடித்திருக்கும் இந்த வேத புத்தகத்தின் சரித்திரமாவது இந்த **பெந்தேகோஸ்தே சபை** பாஸ்டர்களை உணர்த்தவில்லையா?

கொஞ்சம்கூட மனசாட்சியற்றவர்களாக இல்லாத ஒன்றை இருப்பதுபோல கூறி சபை மக்களை அந்நியபாஷகளை பேச சொல்லி மக்களை இன்னும் எத்தனை காலம் ஏமாற்றபோகிறார்கள். கர்த்தர் அவர்களை கணக்கு கேட்பார்கரே!.

' திருநெல்வேலியிருந்தும், கன்னியாகுமரியிலிருந்தும் மிஷனரி ஊழியம் செய்ய இன்றைக்கு ஆயிரம்ஆயிரமாக மிஷனரிகள் புறப்பட்டு காட்டை நோக்கி, மலைகளைத்தேடி ஆத்துமாக்களுக்கு இயேசுவை அறிவிக்க போயிருக்கிறார்களே. ஆனால் பெந்தேகோஸ்தே சபையிருந்து ஏதாவது ஒரே ஒரு மிஷனரி அனுப்ப மனமில்லாமல் போனதென்ன? சிஎஸ்ஐ

சபைகளிலிருந்து மிஷனரிகளாக சென்றவர்கள் வடஇந்திய கோடியில் மலைகளில் ஆங்காங்கு 17000 சபைகளை உருவாக்கி ஆதிவாசிகளுக்கு காட்டுவாசிகளுக்கு இயேசுவே தெய்வம் என்று அறிவித்ததால் அவர்கள் வீட்டில்உள்ள எல்லா விக்கிரகங்களையும், பிசாசு சம்பந்தமான பொருள்களையும் வீசி எறிந்து இன்று இயேசுவுக்கு ஜீவனுள்ள சாட்சியாக விளங்குகிறார்கள். ஒவ்வொரு ஆதிவாசிகளும் சபைகளில் தங்கள் சாட்சிகளை ஆராதனைகளில் வாரம் தவறாமல் கூறுகிறார்களே எப்படி?.

' **பெந்தேகோஸ்தே** சபைகளான AOG,TPM,IPC போன்ற மற்ற பெந்தேகோஸ்தே சபை பாஸ்டர்கிளில் ஒருவராவது அல்லது **பெந்தேகோஸ்தே சபை விசுவாசிகள்** ஒருவராவது அந்த காட்டு பகுதி சபைகளை போய் நேரில் பார்த்துண்டா? இந்த நாட்டில் உள்ள சிஎஸ்ஐ,லூாத்தரன் சபைக்கு அருகிலேயே தெருவுக்கு **5 பெந்தேகோஸ்தே சபைகளை** ஆரம்பித்து கலங்கிய குட்டையில் மீன்பிடிக்க காத்திருக்கிறவர்களாகத்தான் இவர்கள் இருக்கிறார்கள்!. நான் கூறுகிறேன்!.

இந்த பெந்தேகோஸ்தே சபையில் உள்ளவர்கள் மிஷனரி பணிதளத்துக்கு போகாது இருப்பதே மேல்!.என்று நினைக்கிறேன். அவர்கள் ஆதிவாசிகள் மத்தியில் **க்க்ரோ புக்கரே ஷிரபலா** என்று **அந்நியபாஷையில்** பேசியிருந்தால் அத்தனை ஆதிவாசிகளும் காட்டுக்குள் ஓடிபோயிருப்பார்கள். அவர்கள் யோசிப்பார்கள் நம் ஆராதித்த பிசாசின் ஆவியைபோலவே இவர்களும் நடுங்குகிறார்களே! துள்ளுகிறார்களே!, ஆடுகிறார்களே!. உளருகிறார்களே!, பிசாசின் பிடியிலிருந்து நாம் விடுப்பட்ட மாதிரி இந்த **பெந்தேகோஸ்தே மக்களும்,பாஸ்டர்களும்** தங்கள் உளருவதை நிறுத்தமாட்டார்களா! என்று நினைப்பார்கள்.

' **பாஸ்டர்.ராஜாமணி** அவர்கள் தான் எழுதிய கடிதத்தில் சகல காரியங்களும் **இரண்டு,மூன்று சாட்சிகளுடைய** வாக்கினால் நிலைவரப்படும் என்று பவுல் எழுதியதை தன் வாதத்துக்காக எடுத்துக்கொண்டார்.

# அந்நியபாஷையில் பேசாதவர்கள்:

ஆனால் இவரின் **முதல் சாட்சியே** அடிப்பட்டுவிட்டது, இது **பொய்யான** சாட்சியாகிபோனது.

= சமாரியர் விசுவாசிகளானபோது பேதுருவும், யோவானும் அவர்களிடம் வந்து கைகளை வைத்து ஜெபித்தனர். அப் 8:18. இங்கு நடந்த பரிசுத்த ஆவியானவரின் நிகழ்ச்சியில் **அந்நியபாஷையில்** யாரும் பேசவில்லையே!.

**= சமாரியர் பரிசுத்த ஆவியானவரை பெற்றபோது யாரும் அந்நியபாஷை பேசவில்லை என்பதை கவனிக்கவும்.**

பவுல் தான் **அதிகமான பாஷைகளை** பேசினதாக 1 கொரி 14:18ல் கூறுவதை பாஸ்டர்.ராஜாமணி அவர்கள் சுட்டிகாட்டுகிறார்.

மற்ற அப்போஸ்தலர்கள் யூதர்கள் மத்தியில் மட்டும்தான் சுவிசேஷம் அறிவித்தார்கள். ஆனால் **பவுல்** மட்டும் **பல தேசங்களில்** சுற்றிதிரிந்து பாஷைகளை கற்று சுவிசேஷபணி

செய்து அவர்கள் பாஷைகளை கற்றுக்கொண்டு அங்குள்ளவர்களோடு பேசி அவர்கள் பாஷையில் அவர்களுக்கு சுவிசேஷம் அறிவித்தார்.

ஆகவே மற்ற எல்லா சீஷர்களைவிட மிக அதிகமான **பாஷைகளை** பவுல் பேசிய பழக்கம் உண்டு. அதைத்தான் அந்த வசனத்தில் குறிப்பிடுகிறார்.

= **தான் பரிசுத்த ஆவியினால் நிறைந்து மிக அதிகமான அந்நிய பாஷைகளை** மற்றவர்களை **காட்டிலும் பேசியதாக அவர்** கூறவில்லையே?

அப்போஸ்தலர் நடபடிகைகளில் **பிதா-குமாரன்-பரிசுத்தாவி** என்று எங்கும் குறிப்பிடவில்லை என்பதை சுட்டிக்காட்டி அதுபோலவே மேலே குறிப்பிட்ட இடத்தில் எல்லாம் **அந்நியபாஷையில்** பேசாததால் **அந்நியபாஷை இல்லை** என்று கூறவிடமுடியாது என்கிறார்.

இல்லாததை எதற்கு இப்படியிருக்கும்,அப்படியிருக்கும் என்று கற்பனை பண்ணவேண்டும். **தெளிவாக எழுதப்பட்டதை மட்டும்** செயல்படுத்தலாம் அல்லவா?

**= எழுதப்பட்டதற்கு மிஞ்சி எண்ணவேண்டாம் என்று பவுல் கூறுகிறார். 1 கொரி 4:6.**

**= காணாதவைகளில் துணிகரமாக நுழையகூடாது என்றும் பவுல் கூறுகிறார். கொ 2:19**

அப் 8:18ல் சமாரியர் இயேசுவை மேசியாக ஏற்றுக்கொண்டு **விசுவாசிகள்** ஆனார்கள். ஆனால் **பரிசுத்த ஆவியானவரை** பெறவில்லை.

உடனே பேதுரு அவர்களிடம் சென்று பரிசுத்தாவியனவரைப்பற்றி அவர்களிடம் விசாரித்து பேசி தன் கைகளை அவர்கள்மேல் வைக்கிறார்.

உடனே பரிசுத்தாவியானவர் இறங்கினார் என்று எழுதியிருக்கிறது.

## அந்நியபாஷை பேசவில்லையே?

ஆனால் அந்த சமயத்தில் இவர்கள் யாரும் **அந்நியபாஷை பேசவில்லையே?**

பரிசுத்தாவி பெற்றவர் அனைவரும் **அந்நியபாஷை** பேசினால்தான் ஆவியானவரை பெற்றதற்கு **அடையாளம்** அப்போதுதான் அவர்கள் AOG சபையில் சேர்க்கபடுவார்கள் என்கிற தவறான உபதேசம் உடைய AOG, IPC,TPM சபையிலும் அல்லது பாஸ்டர்.ராஜாமணி அவர்களின் மதுரை AOG சபையிலும் **அந்நியபாஷை** பேசாத அதேசமயம் பரிசுத்த **ஆவியானவரை** பெற்றவர்களான சமாரியரை இந்த **பெந்தேகோஸ்தே சபையினர்** யாரும் தங்கள் சபைகளில் சேர்த்துக்கொள்ளமாட்டார்கள்.

ஆனால் ஆண்டவர் தம் புதிய ஏற்பாட்டு சபையில் **சமாரியரை** சேர்த்துக்கொண்டார்.

**சமாரியர் பரிசுத்தஆவியானவரை பெற்றபோது அந்நியபாஷை பேசவில்லை** என்பதைக்குறித்து எந்த **பெந்தேகோஸ்தே சபை பாஸ்டர்களும் வாயே திறப்பதில்லை.** காரணம் அவர்களின் தறவான உபதேசத்துக்கு அந்த சம்பவம் சாதகமாக இல்லை. இது மாய்மாலம் அல்லவா?.

## மோகன்.சி.லாசரஸ் அவர்களின் தவறான அனுபவமும் தவறான உபதேசமும்:

பெரிய ஊழியர்கள் தங்கள் **அனுபவத்தை** மக்களுக்கு கூறும்போது அது வசன **அடிப்படையிலாக** அமைந்திருக்கவேண்டும். அல்லவென்றால் ஒரு பெரும் கூட்டத்தை அவரைப்போல் தவறான வழியில் நடத்தி செல்லபவர்களாக இருப்பார்கள்.

**மோகன்.சி.லாசரஸ் - வாலிபர் உலகம் 2013 ஆகஸ்ட்: பக்கம் :6.** அன்று ஒரு நாள் முழுவதும் என்னால் ஜெபிக்கவோ வேதம் வாசிக்கவோ முடியவில்லை. மனதில் அதிகமான பாரம் அழுத்தியது. அப்பொழுது நான் வழக்கமாக ஜெபிக்கும் தேறிக்காட்டிற்கு சென்றேன். அங்கு சென்றபின் நான் ஆவியானவரால் நிரப்பப்பட்டேன்.

**நான் ஒரு வார்த்தைக்கூட தமிழில் ஜெபிக்காமல்** முழுவதுமாக **அந்நியபாஷையிலேயே** ஜெபிக்க ஆரம்பித்தேன்.

நான் **ஜெபிப்பது என்னவென்று எனக்கே தெரியவில்லை.** அதேசமயத்தில் நான் தமிழில் ஜெபிக்க முயன்றும் என்னால் தமிழில் ஜெபிக்க முடியவில்லை. **ஆவியானவரே** எனக்கு பதிலாக ஜெபத்தை செய்தார் என் மனபாரம் எல்லாம் நீங்கியது என்று எழுதியுள்ளார். மோகன் சி.லாசரஸ்க்குள் இருக்கும் **தமிழ் தெரியாத ஆவியானவர் யார்?** என்று இப்போது இதை வாசிக்கிற உங்களுக்கு விளங்குகிறதா? இப்படிப்பட்ட ஆவியானவருக்கு **மற்ற பாஷைகள்** எப்படி விளங்கும்? **என்னப் பரிதாபமான அனுபவம்.** அந்த ஒரு மணி நேரம் மோகன் சி.லாசரஸ் **ஜெபித்தது வேஸ்ட்** என்று விளங்கவில்லையா? உள்ளத்தின் நினைவுகள் வாய் பேசும் என்று ஒரு பழமொழி உண்டு. அப்படியானால் அன்று இவர் உள்ளத்தில் இருந்த **பாரம் என்ன? எதற்காக கடவுளிடம் ஜெபிக்க போனார்** என்று **மோகன்.சி.லாசரஸ்** அவர்களுக்கே விளங்கவில்லையே? பின் எதற்காக ஜெபிக்க **தேறிக்காடு** நோக்கி போகவேண்டும்?. வேதத்தில் உள்ள ஒரே ஒரு வசனத்தை மனதில் கொண்டு குழம்பிபோய், கர்த்தரோடு தன் தாய் பாஷையில் **உறவாடும் இன்பத்தை** இவர் இழந்துவிட்டாரே.

வாசிக்கிறவர்கள் மோகன்.சி.லாசரஸ் கூறும் இப்படிப்பட்ட கற்பனை அனுபவத்தை உண்மை என்று எண்ணி ஜெபித்த முறையையும் இவர் உபதேசத்தையும் பின்பற்றிவிட வேண்டாம். ❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

# செசரியா அப் 10:45, எபேசு 19:6

கடந்த முறை பாஸ்டர்.ராஜாமணி அவர்கள் அந்நியபாஷை உண்மை என்பதற்காக **மூன்று சாட்சிகளால்** ஒரு விஷயம் உறுதிப்படும் என்ற வசனத்தை காட்டி தன் கடிதத்தை எழுதி கொண்டு வருகிறார். அதில் ஒரு **சாட்சி பொய்யானது** என்று உறுதியாகிவிட்டது. அப்படியாக அவர் குறிப்பிட்ட **முதல் சாட்சி துாள்துாள்** ஆனது.

இனி நான் எழுதபோது அடுத்த அவருடைய **2 சாட்சிகளும்** புஸ்வானம் மாதிரி ஆகப்போவதை கவனியுங்கள்.

# திறவுகோல்:

இந்த திறவுகோல் விஷயத்தை அறியும்முன் இதைப்பற்றிய மிகவும் முக்கிய **சரித்திர பின்னியை** நீங்கள் அறியவேண்டும்.

பேதுருவுக்கு இயேசுகிறிஸ்துவினால் கொடுக்கப்பட்ட **திறவுகோலைப்பற்றி** அறியவேண்டும். திறவுகோல் என்றால் பூட்டை திறக்க உபயோகிக்கும் **சாவி அல்ல.** சகோ.தினகரன் ஊழிய பண வியாபாரத்துக்காக அறிமுகப்படுத்திய **தங்க சாவி** யைப்பற்றி கேள்விபட்டீர்கள் அல்லவா? அதைக்குறித்து ஜாமக்காரனிலேயே நான் எழுதியிருக்கிறேன். **இயேசு அழைக்கிறார்** பத்திரிக்கையிலும் அதைக்குறித்து வாசித்திருப்பீர்கள். கர்த்தர் தன்னிடம் ஒரு **தங்க சாவியை** உண்டாக்க சொன்னாராம். அதை ஒரு **லட்சரூபாய்** கொடுக்கும் பணக்கார வியாபாரிகளுக்கு விற்றால், அதை வாங்கும் **அந்த வியாபாரி** அல்லது கார் கம்பெனி முதலாளி தான் அமர்ந்திருக்கும் ஆசனத்தின் பின்பக்கம் உள்ள சுவரில் மாட்டி வைத்தால் அவர்கள் வியாபாரம் பன்மடங்கு செழிக்கும்!. கம்பெனி விருத்தியாகும்! என்று விளம்பரம் செய்தார். அதை ஒரு சில வியாபாரிகள் மட்டும் வாங்கி தன் ஆபீஸில் அறையில் தான் அமரும் ஆசனத்தின் **பின்பக்கம் மந்திரவாதி கொடுத்த தாயத்து** கட்டிவைப்பதுபோல **தங்கசாவியை மாட்டி** வைத்தார்கள். இவர் கூறியதை அப்படியே நம்பின **கிறிஸ்தவ முட்டாள் வியாபாரிகள்,முட்டாள் கம்பெனி** முதலாளிகள் சிலர் அந்த **சாவியை** வாங்கினார்கள். ஆனால் அந்த **சாவி வாங்கின பலரின் வியாபாரங்கள் நஷ்டமடைந்தன. கம்பெனிகள் படுத்துவிட்டன.** சகோ.தினகரனின் சாவி வியாபாரமும் படுத்துவிட்டது. அதன்பின் சகோ.தினகரன் **அந்த சாவி** வியாபாரத்தை நிறுத்திவிட்டார். நான் குறிப்பிடுவது இப்படிப்பட்ட **சாவிகள் அல்ல.** இயேசுகிறிஸ்து **பேதுருவிடம்** கொடுத்தது. சாவி என்ற பொருள் அல்ல, அதற்கு ஆவிக்குரிய அர்த்தம் உண்டு.

இயேசுகிறிஸ்து ஒருநாள் பேதுருவிடம் ஒரு கேள்வி கேட்டார். அதற்கு பேதுருவும் சரியான பதிலை கூறினான். மத் 16:19 கிறிஸ்துவைப்பற்றி சரியான அறிவு தனக்கு உண்டு என்பதை அந்த பகுதியில் பதிவுசெய்தான்.

இயேசுகிறிஸ்து பேதுருவின் பதிலில் மிகவும் திருப்தி கொண்டார். உடனே அந்த சூழ்நிலையில் தான் **இயேசு பேதுருவிடம் பரலோக ராஜ்யத்தின் திறவுகோல்களை நான் உனக்கு தருவேன்** என்றார்.

திறவுகோல் என்றால் அதிகாரம்(Authorathy) மத் 16:13-19. நீ பேதுருவாய் இருக்கிறாய்(**பேதுரு என்றால் பாறை** என்று அர்த்தம்) (பத்ரோஸ். PETER- பேதுரு) இந்த கல்லின்மேல் (இந்த பாறையின் மேல்) என் சபையை கட்டுவேன்.

**பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை.**

**பரலோக ராஜ்யத்தின் திறவுகோல்களை நான் உனக்கு தருவேன். பூலோகத்தில் நீ கட்டுகிறது எதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும்.** பூலோகத்தில் நீ **கட்டவிழ்க்கிறது** எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்றார்.

இந்த வார்த்தை முழுவதும் **ஆவிக்குரிய அர்த்தம்** அடங்கியதாகும். மத் 18:18ம் வசனத்தில் எல்லா அப்போஸ்தலர்களுக்கும் இந்த அதிகாரம் கொடுக்கப்பட்டது என்று ஒரு சிலர் கூறுவார்கள். அவர்கள் இது சம்பந்தமாக வேறு சில முக்கிய வார்த்தைகளை கவனிக்காமல் கூறுவார்கள். இதில் முக்கியமாக கவனிக்கப்படவேண்டியது **திறவுகோல்** இந்த வார்த்தை **எல்லா அப்போஸ்தலர்களுக்கும்** வழங்கப்படவில்லை என்பதை முக்கியமாக மனதில் கொள்ளவேண்டும். இந்த **திறவுகோல்** என்ற வார்த்தை **பேதுருவுக்குமட்டுமே உரியது** என்பதையும் கவனிக்கவேண்டும்.

ஒரு கட்டிடத்தை திறந்து வைக்க **சிறப்பு நபர்** ஒருவரை அழைக்கிறோமே! அதைப்போலவே **பேதுருவுக்கு** திருச்சபை சரித்திரத்தில் இந்த சிலாக்கியத்தை கர்த்தர் அவருக்குமட்டும் அருளி செய்தார். இயேசுவை உலகத்தின் அனைத்து மக்களுக்கும் அறிவிக்க செய்து அவர்களை பரலோகம் செல்லும் பாக்கியத்தை **பேதுரு மூலம்தான்** ஆரம்பித்து வைக்கவேண்டும் என்பதே தேவனின் திட்டமாக இருந்தது.

**சுவிசேஷம் உலகம் அனைத்திற்கும் சொல்லப்படவேண்டும்.** ஆனால் **பழைய ஏற்பாட்டு** சரித்திரம் முடிந்தவுடன், **புதிய ஏற்பாட்டு** சரித்திரம் தொடங்கும்போது சுவிசேஷம் அறிவித்து **பரலோக வாசலுக்குள்** கடக்க **மூன்றுவித கூட்டத்தினருக்கு** ஆண்டவர் கூறிய **வரிசையின்படி** கர்த்தர் கொடுத்த **திறவுகோல்களை** கொண்டு (அதிகாரத்தைக் கொண்டு) **பேதுரு மூன்று கூட்டத்தினரை பரலோகத்துக்குள் பிரவேசிக்க தகுதிப்படுத்தி அந்த மூன்று கூட்டத்தினரையும் அதனதன் வரிசைப்படி பேதுரு உட்பிரவேசிக்க பண்ணினான்.**

**முதல் உரிமை யாருக்கு, இரண்டாவது உரிமை** யாருக்கு கொடுக்க வேண்டும் என்பதைக்குறித்து இயேசுகிறிஸ்து கூறி, அதன்பின் **உலக மனைத்துக்கும் சுவிசேஷம் என்ற தன் திட்டத்தை** செயல்படுத்தினார்.

இந்த **மூன்று என்பது அப்போஸ்தலர்** 1:8ன்படி **யூதர்,சமாரியர்,பின் உலக ஜாதிகள்** என்பதாகும்.

## ‘ முதல் உரிமை: யூதருக்கு:

அப்போஸ்தலர் 2ம் அதிகாரத்தில் **பெந்தேகோஸ்தே நாளில்** பேதுரு மற்ற எல்லா சீஷர்களோடு நின்று கொண்டுஇருக்கும்போதுதான் **முதன்முறையாக** பரிசுத்த ஆவியானவரின் இறக்கம் உண்டானது. அந்த முதல் இறக்கம் **யூதர்களாகிய பேதுருவுக்கும்** அவர்கூட இருந்த சீஷர்கள் யாவரின் மேலும் உண்டானது.

அப்படி **யூதருக்கு** பரிசுத்த ஆவியானவரின் **அனுபவம்** முதலில் உண்டாக கர்த்தர் பேதுருவை **திறவுகோலாக** பயன்படுத்தினர். அதன்மூலம் **முதல் சபை** உருவானது.

## ‘ இரண்டாவது உரிமை: சமாரியருக்கு:

இரண்டாவதாக **சமாரியர்** யூதர்களின் வழியாக வசனத்தைக்கேட்டு **இயேசுவை** மேசியாவாக ஏற்றுக்கொண்டார்கள். ஆனால் அந்த சம்பவம் நடந்த இடத்தில் **பேதுரு இல்லை** என்பதை கவனிக்கவேண்டும். இரண்டாவதுமுறை பேதுரு சமாரியரிடத்தில் வந்தபோதுதான் **பரிசுத்த ஆவியானவரின் இறக்கம்** உண்டானது. இது ஆண்டவரின்

திட்டப்படி **இரண்டாம் திறவுகோல் உபயோகிக்க பேதுரு** பயன்பட்டார். எல்லாராலும் ஒதுக்கப்பட்டவர்களானவர்களும், கலப்பு இன மக்களுமான சமாரியருக்கு மனந்திரும்புதலும் பரிசுத்த ஆவியானவரின் இறக்கம் அவர்கள்மேல் உண்டாகி தெய்வம் இப்படிப்பட்டவர்களையும் நேசிக்கிறார் என்பதை விளக்க கர்த்தரின் திட்டமான **இரண்டாம் திறவுகோல்** பேதுரு மூலமாக பயன்படுத்தப்பட்டது.

' **மூன்றாவது உரிமை:**

**யூதர் அல்லாத புறஜாதியினருக்கு உரிமையாகும். இயேசுகிறிஸ்துவின் திட்டப்படி பரலோகத்துக்கு தகுதியாக்கும் மூன்றாவது பட்டடியலில் புறஜாதிகள் இடம் பெறுகிறார்கள்.**

அப் 10 ம் அதிகாரத்தில் புறஜாதியானான **கொர்நெல்லியூஸ்** சுவிசேஷம் கேட்கவும் இயேசுவை விசுவாசிக்கவும் வழிஉண்டாக்க **கொர்நெல்லியூஸ்** வீட்டுக்கு பேதுரு வரவழைக்கப்பட்டான். மற்றபடி பேதுரு புறஜாதிகளுக்கு பரலோகம் கிடையாதுஎன்ற தவறான எண்ணத்தில் இருந்தவன். கர்த்தர் துப்பட்டியில் தீட்டுள்ள மிருகங்களை காட்டி அதன்மூலம் தான் இயேசுவாகிய நான் எல்லாருக்கும் தெய்வமாயிருக்கிறேன். புறஜாதிகளையும் நான் நேசிக்கிறேன் என்பதை அந்த தரிசனம்மூலம் கர்த்தர் பேதுருவுக்கு உணர்த்தி **கொர்நெல்லியூஸ்** வீட்டுக்கு போக சொன்னார்.

அந்த வீட்டாரோடு மற்ற நண்பர்களும் உறவினரும் இயேசுவை ஏற்றுக்கொண்டதால் **பேதுருவின்** முன்னிலையில் புறஜாதிகளுக்காக **மூன்றாவது திறவுகோல்** உபயோகிக்கப்பட்டு அங்கிருந்த அத்தனை பேர் மேலும் பரிசுத்தாவியானவர் இறங்கியதையும் அவர்கள் அந்நியபாஷையில் பேசியதையும் பேதுருவை கண்டு ஆச்சரியப்பட்டான். பேதுருவை உணர்த்த இந்த சம்பவம் பயன்பட்டது. இயேசுவின் திட்டப்படி இப்போது 3 திறவு கோல்களும் உபயோகப்படுத்தப்பட்டது.

பேதுருவின் முன்னிலையில் அப் 2ம் அதிகாரத்தில் **யூதருக்கும்** அப் 8ம் அதிகாரத்தில் **சமாரியருக்கும்** அப் 10 அதிகாரத்தில் **புறஜாதிகளுக்கும்** பரிசுத்த ஆவியானவரின் நிறைவு உண்டாகி, இப்போது வேதம் கூறிய 3 பிரிவினரும் ஒரே சபையாக இணைக்கப்பட்டார்கள்.

கர்த்தரின் இந்த கிருபையுள்ள திட்டம் உலகில் உளள் அனைவருக்கும் ஒன்றாக நிறைவேற்றப்பட்டது.

மேலே வாசித்த மூன்று இடங்களில் மூன்று பிரிவினருக்கு பரிசுத்தாவியானவர் அருளப்பட்டப்பின் ஒவ்வொரு இடத்திலும் மக்கள் **சுவிசேஷம் கேட்டு விசுவாசிகளாகி** ஆயிரக்கணக்கில் **சபையில்** சேர்க்கப்பட்டனர். இவர்கள் யாரும் **அந்நியபாஷை பேசியாதாகவோ, குறிப்பிட்ட இந்த மூன்று சம்பவங்களை தவிர மற்ற எந்த ஒரு இடத்திலும் சீஷர்கள் அந்நியபாஷையில்** பேசியதாக வேதத்தில் ஒரு நிருபத்திலும் பதிவு செய்யப்படவில்லை. சபைகள் அந்நியபாஷையில் பேசவேண்டும் என்ற கட்டளையோ உபதேசமோ புதிய ஏற்பாட்டு புத்தகத்தில் எங்கும் கூறப்படவும் இல்லை

மேலே குறிக்கப்பட்ட **மூன்று இடங்களிலும் மட்டுமே** ஆவியானவர் வருகையைப்பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

‘ ஆவியானவர் பிரத்தியட்சமாக வந்ததை அப் 2,8,10,19 அதிகாரங்களில் மட்டுமே வேதத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதில் மூன்று இடங்களில் மட்டும் **அந்நியபாஷை** பேசினதை குறிப்பிடப்பட்டுள்ளது.

## தவறான கருத்து:

ஒரு மனிதன் இரட்சிக்கப்பட்டபின் **இரண்டாவது அனுபவமாக** ஆவியானவரை பெற்றுக்கொள்ளவேண்டும் என்று **பெந்தேகோஸ்தே சபையினர்** கூறுவதை நாம் அறிவோம். இவர்கள் இதற்கு ஆதாரமாக இரண்டு அதிகாரங்களை காட்டுவார்கள்.

1). அப் 8ம் அதிகாரத்தில் **சமாரியர்** பெற்ற அனுபவத்தையும்

2). அப் 19ம் அதிகாரத்தில் **எபேசு** பட்டிணத்தில் யோவானுடைய சீஷர்கள் 12 பேர் பெற்ற அனுபவத்தையும் குறிப்பிடுவார்கள்.

இவைகளைக்குறித்தும் நீங்கள் தெளிவு பெறுவது நல்லது அப் 8ம் அதிகாரத்தில் **சமாரியர்** பெற்றுக்கொண்ட அனுபவ விவரங்களைக்குறித்து ஏற்கனவே பார்த்துவிட்டோம்.

## எபேசு பட்டிண அனுபவம்:

இனி அப் 19ம் அதிகாரத்தில் நடந்த சம்பவத்தை கவனிப்போம். இந்த அதிகாரத்தில் அப்போஸ்தலனாகிய **பவுல்** எபேசு பட்டிணத்துக்கு வந்ததாக வாசிக்கிறோம்.

இங்கு **பவுல் யோவானுடைய சீஷர்களை** கண்டார். இந்த இடத்தில் குறிப்பிட்ட சம்பவம் நடந்த காலத்தை கவனிக்கவேண்டும். அது முக்கியம்.

இந்த சீஷர்கள் அப் 19:7ல் கூறப்பட்டபடி இயேசுகிறிஸ்துவின் **சிலுவை மரணம், உயிர்தெழுதல், பரிசுத்த ஆவியானவரின் இறக்கம்** ஆகியவைகள் நடைபெறுவதற்கு முன்பான கால கட்டத்தில் யெகோவாவை விசுவாசித்தார்கள். அப்போது இவர்கள் யோவான் கொடுத்த ஞானஸ்நானத்தை பெற்றவர்கள் ஆகும்.

அப்போது யோவான் தன் சீஷர்களிடம் கூறும்போது என்னை நீங்கள் பெரிய குருவாக ஞானியாக காண்கிறீர்கள். ஆனால் எனக்கு பின்னே **ஒருவர்** வருகிறார் அவர்தான் **ராஜ்ஜியத்தை ஸ்தாபிக்கும் ராஜாவாக** வரப்போகிறார். அவரை நீங்கள் விசுவாசிக்க வேண்டும். நீங்கள் மனந்திரும்பவேண்டும் என்று பிரசங்கம் பண்ணினான். அதை ஏற்றுக்கொண்டு விசுவாசித்து ஏராளமானவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அந்த கூட்டத்தில் இருந்தவர்கள்தான் **எபேசுவில் கண்ட 12 சீஷர்கள்.** இவர்களுக்கு இயேசுவின் மரணம்,உயிர்தெழுதல்,பரிசுத்த ஆவியானவரின் அருளப்படுதல் இவைகளைக்குறித்து ஒன்றும் தெரியாது. ஆகவேதான் நீங்கள் விசுவாசிகளானபோது **பரிசுத்த ஆவியை** பெற்றீர்களா? என்று பவுல் கேட்டபோது **பரிசுத்த ஆவியானவரைப்பற்றி** நாங்கள் யாரும் கேள்விப்படவேயில்லை என்றார்கள். அப்படியானால் நீங்கள் **எந்த ஞானஸ்நானம் பெற்றீர்கள்?** என்று கேட்டார். அந்த 12பேர் இதுவரை **இரட்சிப்பின் சுவிசேஷத்தை** கேட்டதில்லை என்பதை பவுல் புரிந்துக்கொண்டார்.

எபேசு 1:12ல் கூறியுள்ளபடி **நீங்களும் உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக்கேட்டு விசுவாசிகளானபோது வாக்குதத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியால் முத்திரை போடப்பட்டீர்கள்** என்று இந்த நிகழ்ச்சிகளுக்குப்பிறகுதான் **எபேசு** சபைகளுக்கு நிருபம் எழுதியிருக்கிறார். ஆகவே இந்த 12 பேர் இரட்சிப்பின் சுவிசேஷம் கேட்டிராதவர்கள்.

அதனால்தான் 1 கொரி 15:3,46ல் **இந்த சுவிசேஷம்** எது என்று அந்த வசனங்களில் விளக்குகிறார். **கிறிஸ்துவானவர் வேத வாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து அடக்கம் பண்ணப்பட்டு வேத வாக்கியங்களின்படி மூன்றாம் நாள் உயிர்தெழுந்தார் என்ற சுவிசேஷத்தை அறிவித்தார்.**

இவர்களிடம் நீங்கள் எந்த ஞானஸ்நானம் பெற்றீர்கள் என்று கேட்ட பவுலின் **கேள்வியில் வேறொரு விஷயம்** இருக்கிறது. இயேசு உயிர்தெழுந்து பரமேறிபோகும்முன் கொடுக்கப்பட்ட கட்டளையில் நீங்கள் போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி **பிதா,குமாரன், பரிசுத்த ஆவியின்** நாமத்தில் அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுங்கள் என்று கட்டளையிட்டார் அல்லவா? மத் 28:19. இயேசு கூறிய அந்த **ஞானஸ்நானம் எடுத்திருந்தால்** பரிசுத்த ஆவியானவரைப் பற்றி அறிந்திருக்கவேண்டும். ஆனால் இவர்கள் அதை அறியவில்லை. இயேசுவைப்பற்றியும் இயேசு திரியோகத்தில் ஒருவரானவர் என்பதையும் இவர்கள் அறியாத காரணத்தால் இங்கு **இயேசுவின் நாமத்தில் ஞானஸ்நானம்** கொடுத்தார்.

ஆரம்பத்தில் இந்த 12பேர் இயேசுவை **புதிய இராஜ்ஜியம் ஸ்தாபிக்கப்போகிறவர்** என்று மட்டுமே விசுவாசித்திருந்தார்கள். ஆனால் பவுலின் பிரசங்கத்திற்கு பிறகு **இயேசு மரித்து,உயிர்தெழுந்த கிறிஸ்துவாக** இரட்சிக்கிறவராக விசுவாசித்தார்கள். **இயேசுவின் இரத்தம்** மூலமாக மட்டுமே **பாவங்கள் நீங்கி கழுவப்பட முடியும்** என்பதை விசுவாசித்தார்கள். அதன்பின்தான் இவர்களும் சபையில் சேர்க்கப்பட்டார்கள். இவர் சபையில் சேர்க்கப்படுகிறார்கள் என்பதற்கு அடையாளமாக **பவுல் இவர்கள் மேல் கைகளை வைத்தபோது அவர்களும் பரிசுத்த ஆவியானவரை பெறவும்,** அதற்கு அடையாளமாக ஆரம்பத்தில் அப் 2ல் அப்போஸ்தலர்கள் ஆவியில் நிரப்பப்பட்டுபோது **பாஷைகளை** பேசினதுபோன்ற அடையாளம் இவர்களுக்கும் கொடுக்கப்பட்டது. இதற்காக மட்டுமே இவர்களை அந்நியபாஷையை பேச வைத்தார். இதைத்தவிர மற்ற எந்த நபருக்கும் சபைக்கும் அந்நியபாஷை பேசும்படி கட்டளை கொடுக்கப்படவில்லை என்பதை அறிய வேண்டும்.

இதே ஆண்டவரைத்தான் இவர்கள் முன்பும் விசுவாசித்தார்கள். ஆனால் அப்போது **ஆவியானவர்** இவர்களுக்கு ஏன் அருளப்படவில்லை என்ற சந்தேகம் எழலாம். இந்த 12 சீஷர்கள் **விசுவாசிகளான காலம் வேறு** என்பதை கவனிக்கவேண்டும். யோ 7:39ல் இயேசு தம்மை விசுவாசிக்கிறவர்கள் அடையப்போகிற **ஆவியைக்குறித்து** இப்படி சொன்னார். **இயேசு இன்னும் மகிமைப்படாதபடியால் பரிசுத்த ஆவி இன்னும் அருளப்படவில்லை.** ஆகவே இந்த குறிப்பிட்ட சரித்திர கால கட்டங்களையும்,சம்பவங்களையும் **காலங்களையும்**

அறிந்துக்கொண்டதால் இங்கு மட்டும் ஏன் **இரண்டாவது அனுபவமாக** பரிசுத்த ஆவியானவரின் நிறைவைப்பற்றி கூறப்பட்டுள்ளது என்பதை விளங்கிக்கொள்ளலாம். மற்றப்படி இப்போதுள்ள எந்த சபைக்கும் பரிசுத்தாவியின் இரண்டாவது அனுபவம் என்பது கிடையாது என்பதை அறியவேண்டும்.

## புதிய ஏற்பாட்டில் அந்நியபாஷை அனுபவம்:

அப்போஸ்தலர் நடபடிகளில் மொத்தம் நான்கு இடங்களில் அந்நியபாஷை பேசிய சம்பவம் காணப்படுகிறது.

1). **அப் 2ம் அதிகாரத்தில்**

1). பலத்த காற்று அடிப்பதுபோன்ற முழக்கம்(சத்தம்)
2). வீடு முழுவதும் நிரம்பிய அனுபவம்
3). அக்கினிமயமான நாவுகள் காணப்பட்டது
4). ஆவியால் நிரப்பப்படுதல்
5). வெவ்வேறு பாஷைகளை பேசினார்கள் என்பது சம்பவித்தது.

**2) அப் 8ம் அதிகாரத்தில்**

1).விசுவாசித்தார்கள்
2). ஞானஸ்நானம் பெற்றார்கள்
3). இங்கு **ஆவியை பெறவில்லை** என்று எழுதியிருக்கிறது
4). அப்போஸ்தலர் வந்து ஜெபம் செய்தார்கள்
5). கைகளை வைத்தார்கள்

**3). அப் 10ம் அதிகாரத்தில்**

1). சுவிசேஷம் கேட்டார்கள்
2). பரிசுத்த ஆவியானவர் இறங்கினார்.
3). பல பாஷைகளை பேசினார்கள்
4). ஞானஸ்நானம் பெற்றார்கள்

**4). 19ம் அதிகாரத்தில்**

1). சுவிசேஷம் கேட்டார்கள்
2). விசுவாசித்து இயேசுவின் நாமத்தில் ஞானஸ்நானம் பெற்றார்கள்.
3). பவுல் அவர்கள்மேல் கைகளை வைத்தபோது பரிசுத்த ஆவி அவர்கள்மேல் வந்தார்.
4). பல பாஷைகளை பேசினார்கள்.

மேலே காணப்பட்ட நான்கு இடங்களிலும் **வித்தியாசமான அனுபவங்கள்** ஏற்பட்டதை காணலாம். இதை வாசிக்கிற பெந்தேகோஸ்தே சபையினர் **எதை மாதிரியாக** தெரிந்துகொள்வீர்கள். இவைகள்யாவும் தனிதனி அனுபவங்கள் ஆகும். இவைகளை யாரும் **உபதேசமாக** கூறக்கூடாது.

உண்மையான திருச்சபை மக்கள் அப்போஸ்தலர்கள் **நிருபங்கள்** வழியாக எழுதி கொடுத்த **ஆலோசனைகளையே** கவனித்து பின்பற்ற வேண்டும்.

# 3 சாட்சிகள்:

**பாஸ்டர்.ராஜமணி** அவர்கள் ஆரம்பத்தில் கூறியதுபோல 2 கொரி 13:1ஐ சுட்டிக்காட்டி சகல காரியங்களும் இரண்டு மூன்று சாட்சிகளுடைய வாக்கினால் நிலவரப்படும். அதுபோல வேதத்தில் 3 சாட்சிகளை இவர் கண்டுபிடித்தார். **அந்நியபாஷை சபை** மக்கள் எல்லாரும் பேசவேண்டும் என்பதற்காகவும் வேறு சாட்சிகள் வேதத்தில் எங்கும் இல்லாததாலும் அப் 2,10,19 ஆகிய அதிகாரங்களில் பேசப்பட்ட பாஷைகளைக்குறிப்பிட்டு இந்த மூன்று சாட்சிகள் போதும் இனி எல்லாரும் அந்நியபாஷை பேசலாம் என்கிறார்.



அந்த 3 சாட்சிகளைக்குறித்தும் அந்த மூன்று இடங்களில் மட்டும் பேசப்பட்ட **அந்நியபாஷைகளைப்பற்றியும்** ஒவ்வொன்றாக விளக்கி எழுதினேன்.

இவர் குறிப்பிட்ட சாட்சிகள் யாவும் ஒரு கொலைக்காரனை - அவன் கொலை செய்யவில்லை என்று நிரூபிப்பதற்கு வக்கீல்கள் பல **பொய் சாட்சிகளை** நீதிபதிமுன் நிறுத்துவார்கள்.

அதுபோலவே அந்நியபாஷை சபை மக்கள் பேசவேண்டும் என்று உறுதிப்படுத்த பாஸ்டர்.ராஜாமணி அவர்கள் அந்நியபாஷை உபதேசத்திற்கு சம்பந்தமில்லாத 3 பொய் சாட்சிகளை கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறார். ஞானமுள்ளவர்கள் நான் எழுதியதையும் - அவர் எழுதியதையும் வேத வசனத்தோடு ஒப்பிட்டு பார்த்து முடிவெடுங்கள்.

இவர் கூறிய மூன்று சாட்சிகளுக்கும் இப்போது பெந்தேகோஸ்தே சபையில் பேசும் **அந்நியபாஷைக்கும்** சம்பந்தமில்லை என்பதை தெளிவாக விளக்கிவிட்டேன்.

❖❖❖❖❖❖❖❖

## அந்நியபாஷையை தேவன்தான் பேசவைக்கிறார் என்று பாஸ்டர்.ராஜாமணி கூறுகிறார்:

அந்நியபாஷையை தேவன்தான் பேசவைக்கிறார் என்பதை எந்த வேத ஆதாரமும் இன்றி பாஸ்டர்.ராஜாமணி அவர்கள் கூறி அவரும் குழம்பி மற்றவர்களையும் குழப்புகிறார்.

ஆண்டவர் மற்றவர்களுக்கு விளங்காத பாஷையை கொடுப்பார் என்பதை உறுதிப்படுத்த **எசேக்கியல்** புத்தகத்தில் **நான்கு ஜீவன்கள்** நான்கு முகங்கள்,சக்கரங்கள், சக்கரத்துக்குள் சக்கரம்,சூரியனைப் அணிந்த ஸ்தீரி சமுத்திரத்திலிருந்து எழும்பின **மிருகம்,** இப்படி விளங்காத புரிந்துக்கொள்ள இவைகள் எல்லாம் எதற்கு ஆண்டவர் கூறவேண்டும். எந்த மனிதனுக்கும் இவைகள் விளங்காது இதை உதாரணமாக்கி **அந்நியபாஷைக்கு** ஆதாரமாக இவைகளை கூட்டிக்காட்டுகிறார்.

இது மிகவும் சிறுபிள்ளைகள் பேசுவது போல இருக்கிறது. **எசேக்கியல்,வெளிப்பாடு** புத்தகம் இவைகள் யாவும் **தீர்க்கதரிசனம்** அந்நியபாஷைக்கு இதை இவர் ஏன் உதாரணத்துக்கு எடுக்கிறார்?

= அடுத்து (தானி 5:25-30) **பெல்ஷாத்சார் ராஜாவை** எச்சரிக்க சுவரில் ஒரு கை MN MN TKL UPRS என்ற எழுத்துகளை எழுதியது. இதை **அந்நியபாஷைக்காக** உதாரணப்படுத்துகிறார். **பாபிலோனில் எந்த பண்டிதருக்கும்** இது விளங்கவில்லை. ஆனால் **தானியேல்** ஆவியானவரின் உதவி பெற்று அதன் அர்த்தத்தை கூறிவிடுகிறார்.

இந்த வார்த்தை **அரமேய பாஷையாகும்.** இது உயிரெழுத்து இல்லாமல் வெறும் மெய் எழுத்தினால் விடுகதைப்போல எழுதப்பட்டது.

தானியேல் இந்த வார்த்தையோடு உயிரெழுத்தை சேர்த்து ஒரே வார்த்தையாக அமைத்துவிடுகிறார். MENE MENE TEKEL UPARSIN என்ற வார்த்தை தெளிவாகிறது. உடனே அதன் அர்த்தத்தையும் கூறிவிடுகிறார். அங்குள்ள யாவருக்கும் விளங்கிக்கொண்டு **பாபிலோனிய பண்டிதர்களும்** அர்த்தத்தை ஒத்துக்கொள்கிறார்கள். இப்போது பாஸ்டர்.ராஜமணி அவர்கள் எங்கள் சபைமக்கள் பேசும் பாஷையும் இப்படித்தான் கர்த்தரே பேச வைப்பதாகும் என்கிறார். யாருக்கும் அதன் அர்த்தம் தெரியாது. **ஆவியானவருக்கு** மட்டுமே அதன் அர்த்தம் தெரியும்.

பாபிலோனிய ராஜாவுக்கு எதற்காக **விளங்காத பாஷையை** சுவரில் எழுதவேண்டும் என்று நாம் கேட்க முடியுமா? என்கிறார் பாஸ்டர்.ராஜாமணி அதைப்போல ஏன் கர்த்தருக்குதான் **தமிழ் தெரியுமே,** எதற்கு **அந்நியபாஷையை** கர்த்தர் நம் வாயில் பேச வைக்கிறார் என்று கேள்வி கேட்க முடியும்? என்று வேதம் அறியாதவர்போல பேசுகிறார்.

முன்பு **TPM பாஸ்டர்.ராஜன்** அவர்கள் அர்த்தம் இல்லாத கேள்விகளை,வேத சம்பந்தம் இல்லாத விளக்கங்களை கூறினாரோ அதுபோல இவரும் வசனத்தின்படி தன் கருத்தை விளக்காமல் **மெனே மெனே தெக்கே** என்ற வார்த்தையும் வேதத்தில்தான் இருக்கிறது என்று சம்பந்தம் இல்லாமல் பேசி நேரத்தை வீணாடிக்கிறார். இது வெறும் வாக்குவாதம் தான் தவிர **வேத ஆதாரம் உள்ள விளக்கம் அல்ல.** ஆகவே இனி பாஸ்டர்.ராஜாமணி அவர்களின் கடிதத்தில் காணப்படும் அர்த்தமில்லாத விதண்டா வாதத்துக்கு பதில் அளிக்க நான் விரும்பவில்லை?

- **கேள்விக்கு பதில் சொல்லலாம் - வாக்குவாதத்திற்கு பதில் சொல்லக்கூடாது.**
- **தெரியாதவன் கேள்வி கேட்பான் - ஒத்துக்கொள்ளாதவன் வாக்குவாதம் செய்வான்**

**வாக்குவாதத்துக்கு நாங்கள் வரமாட்டோம்** என்று பவுல் கூறுவதை வேதத்தில் வாசித்துள்ளோம்.

என்றாலும் பாஸ்டர்.ராஜாமணி அவர்கள் எழுதிய கடைசி **உளரலுக்கும்** பதில் கூறி முடித்துவிடுகிறேன்.

மேலே வாசித்தது பாபிலோனிய ராஜாவுக்கு கர்த்தர் கொடுத்த எச்சரிப்பு ஆகும். **எபிரேயர்கள்** பேசும் பாஷையில் தான் கர்த்தர் எழுதினார். நடுவில் சில வார்த்தைகளை விட்டு ஏதோ விளங்காத இரகசியம் போன்று காணப்படவைக்கிறார். இதில் இரண்டு காரியங்களை நடப்பிக்க கர்த்தர் விரும்பினார். பாபிலோனிய பண்டிதர்களையும், ஞானிகளையும் மட்டம்தட்டி கைதியாக பிடித்துவந்த தன்னை நேசிக்கும் **தானியேலை**

ஞானமுள்ளவனாக்கி காண்பித்து அதே அரசாங்கத்தில் நாட்டை ஆளும் உயர்ந்த அந்தஸ்தில் தானியேலை அமர செய்ய தேவன் வகுத்த திட்டம் ஆகும். மேலும் ராஜாவுக்கு கொடுக்கும் **பயங்கர எச்சரிப்பு** இந்த எழுத்தில் அடங்கியிருக்கிறது.

## பாஸ்டர்.ராஜமணிக்கு என் தனிப்பட்ட வேண்டுகோள்:

பாஸ்டர்.ராஜாமணி அவர்களுக்கு கூற விரும்புவது என்னவென்றால் மேலே குறிப்பிட்ட வார்த்தையை **அந்நியபாஷை என்று விளங்காத பாஷை என்றும்,அர்த்தம்** கர்த்தருக்கு மட்டுமே தெரியும்,உலக மக்களுக்கு தெரியாது என்பதைப்போல காட்ட விரும்புகிறீர்களே, பாபிலோனிய ராஜா அரண்மனை சுவரில் எழுதியது இது **என்ன என்று? இத்தனை வருட அனுபவம்** உள்ள உங்களுக்கு உண்மையாகவே தெரியாதா? அல்லது ஒரு **பொய்யை உண்மையாக்க விரும்பி கல்லாதவர்போல நடிக்கிறீர்களா? யாரை திருப்திப்படுத்த இந்த மாய்மாலம்** காட்டுகிறீர்கள். **நிச்சயம் கர்த்தரை அல்ல - அந்நியபாஷை பேசும் உங்கள் பெந்தேகோஸ்தே சபையினருக்கு தெளிவு உண்டாக்கிவிடக்கூடாதே** என்பதற்காக உண்மையை மறைத்து அந்நியபாஷைக்கு வக்காலத்து வாங்க இப்படி எழுதுகிறீர்களா?.

நீங்கள் இப்படி உண்மையை மறைப்பது **ஆவியானவருக்கு விரோதமான செயல் என்று அறியீர்களா**? ஜாக்கிறதை ஐயா. ஆவியானவரோடு விளையாடாதீர்கள்!.

**மெனே, மெனே தெக்கே** என்பது ஒரு **பாஷை. எந்த ஒரு பாஷைக்கும் அர்த்தம்** உண்டு. 1 கொரி 14:8-10. இது ஆண்டவரின் கை எழுதியதால் இது பரலோக பாஷை அல்ல - சில பத்திரிக்கைகளில்,கட்டங்களில் எழுத்துக்களால் நிரப்பும் விளையாட்டை அறிந்திருப்பீர்கள். ஒரு பொருளின் ஆரம்ப வார்த்தையின் முதல் இரண்டு வார்த்தைகளை எழுதியிருப்பார்கள். மீதி கட்டங்கள் காலியாக இருக்கும். அதை சரியான வார்த்தைக்கொண்டு நிரப்பினால் முழு வார்த்தையும் வெளிப்படும். உதாரணமாக வேதத்தை ' ' ' **ப்பவன் பாக்கியவன்** என்று எழுதுவார்கள். இந்த கட்டடங்களை பூர்த்தி செய்தால் வேதத்தை தியானிப்பவன் பாக்கியவான் என்று எழுதி முடிக்கலாம். அதைப்போலவே நடுவில் உயிர் எழுத்தை மறைத்து **மெனே மெனே தெக்கே** என்று மட்டும் கர்த்தர் எழுதினார். **தானியேலுக்கு ஞானத்தை அளித்து இதன் இரகசியத்தை** உணர்த்தினார். உடனே அது எபிரேயர்கள் உபயோகிக்கும் சாதாரண **அரமேய வார்த்தைதான்.** அதற்கு அர்த்தமும் இருந்தது. அதன் விளக்கத்தையும் அதன் அர்த்தத்தையும் **தானியேல்** கூறுகிறான். கர்த்தர் அர்த்தமுள்ள பாஷையில்தான் எச்சரிப்பை எழுதி காட்டினார். அந்த சின்ன சம்பவத்தின் விளக்கம் பாஸ்டர்.ராஜாமணிக்கு எப்படி விளங்காமல் போனது?.

இன்னொரு பெந்தேகோஸ்தே பாஸ்டர் எழுதினார் இயேசுவும் **அந்நியபாஷை** பேசினார். சிலுவையில் **ஏலி ஏலி லாமா சபக்தானி** என்று அந்நியபாஷையில் பேசினார் என்றார். இப்படிப்பட்ட முட்டாள் பாஸ்டர்கள் தங்கள் சபை மக்களை வசனத்தில் எப்படி நடத்துவார்கள்? **யாரோ சில பாஸ்டர்கள் செய்யும் தவறு** என்று இப்படிப்பட்ட முட்டாள்

தனத்தைக்காட்டி இவர்கள் சமாளிக்காதபடியிருக்க, இரண்டு கிறிஸ்தவ பத்திரிக்கைகளில் மேலும் இரண்டு பாஸ்டர்கள் இதே சம்பவத்தை குறிப்பிட்டு இயேசு அந்நியபாஷை பேசினார். ஆகவே நாமும் **அந்நியபாஷை பேசவேண்டும்** என்று வெளிப்படையாக இவர்கள் எழுதும்போது வாசிக்கிறவர்கள் எல்லாரையும் முட்டாளாக்குகிற இவர்களை நாம் ஏன் இவர்களை முட்டாள்கள் என்று கூறக்கூடாது?

அதே சுவிசேஷ பாகத்தில் **ஏலி ஏலி லாமா சபக்தானி** என்பதற்கு **என் தேவனே என் தேவனே ஏன் என்னை கைவிட்டீர்** என்று அர்த்தமாம் என்று எத்தனை தெளிவாக விளக்கமும் எழுதியிருக்கிறது!.

இப்போது சொல்லுங்கள். **மெனே மெனே தெக்கே** என்பது **அந்நியபாஷை ஆவியானவருக்கு மட்டுமே அது தெரியும்** என்று கூறும் பாஸ்டர்.ராஜாமணி அவர்களுக்கும், **ஏலி ஏலி லாமா சபக்தானி** என்று இயேசுவும் அந்நியபாஷையில் பேசினார் என்று கூறிய, எழுதிய அந்த பாஸ்டர்களுக்கும் என்ன வித்தியாசம்?

**இவர்கள் எல்லாரும் ஒரே குட்டையில் ஊறியவர்கள் என்று ஏன் கூறக்கூடாது?.**

ஆகவே பாஸ்டர்.ராஜாமணி அவர்களின் கடிதத்துக்கு நான் கொடுத்த இந்த விளக்கங்கள் போதும் என்று நினைக்கிறேன்.

பாஸ்டர்.ராஜாமணி அவர்கள் கடிதத்தில் **அந்நியபாஷையை** உறுதிப்படுத்த எழுதிய மற்ற உதாரணங்களை வாசித்து நான் விளக்கம் கொடுத்தால் அவரின் நல்மதிப்புக்கு மிகவும் குந்தகம் உண்டாகும். இனி நான் வசனத்தின்படி **அந்நியபாஷை - வரம்** இவைகளைக்குறித்து பெந்தேகோஸ்தே சபைக்காரர்கள் மற்றவர்களை குழப்பும் வசனங்களுக்கு வேத வசன அடிப்படையில் விளக்கம் கொடுக்கப்போகிறேன். அதன்பின் இதுவரை ஜாமக்காரனில் எழுதி முடித்த அத்தனை விஷயங்களையும் சீர்ப்படுத்தி **எழுத்து பிழை- அட்சர பிழை** இவைகளை நீக்கி புத்தக வடிவில் வெளியிடுவேன்.

அந்த புத்தகத்தை **ஆங்கிலத்திலும்,தமிழ்,மலையாளத்திலும்**,இயலுமானால் வடஇந்திய மிஷனரிகளின் உதவியோடு **ஹிந்தியிலும்** மொழிபெயர்த்து புத்தகங்கள் வெளியிடுவேன் என்று கர்த்தருக்குள் நம்புகிறேன். இந்த புத்தக வெளியீடு நான் உயிரோடு இருக்கும்போதே மக்கள் கையில் கிடைக்கவேண்டும் என்பது என் ஆசை.

அதற்குமுன் எந்த பெந்தேகோஸ்தே பாஸ்டராவது அல்லது வேதத்தை முறையாக படித்த விசுவாசிகளாவது இதுவரை நான் எழுதியதற்கு **மாற்று கருத்தை** எனக்கு எழுதினால் அது சரியான விளக்கமாக இருந்தால் அதையும் வெளியிடபோகும் புத்தகத்தில் பதிவு செய்வேன்.

என் 52 வருட ஊழியத்தின் அனுபவத்தில் ஒவ்வொரு **பெந்தேகோஸ்தே சபை பாஸ்டர்கள், விசுவாசிகள்** அல்லது **கன்வென்ஷன் பிரசங்கிமார்கள், டிவி பிரசங்கிமார்கள்** வேதாகம கல்லூரி ஆசிரியராக இருந்தாலும் இவர்கள் **அந்நியபாஷை** பேசுபவர்களாக இருந்தால் என் சிறிய அனுபவத்தில் அவர்கள் உள்ளத்தின் **அடிதளத்தில் பொய்யும்- மாயமாலமும் உண்டு** என்பது உறுதி.

கூடியவரை இவர்களை நம்பவேண்டாம். இப்படி எழுதுவது எனக்கு மனவேதனையை அளிக்கிறது. என்றாலும் **எனக்குள் இருக்கும் ஆவியானவர் எனக்கு அளித்த ஆவியை பகுத்தறியும் கிருபையை ஆதாரமாக வைத்து சந்தேகம் இல்லாமல்** உறுதிப்படுத்தி இதை எழுதுகிறேன்.

அடுத்த ஜாமக்காரனில் பெந்தேகோஸ்தே பாஸ்டர்களும், விசுவாசிகளும், நம் எல்லாரையும் **குழப்புகிற மிக முக்கியமான வசனமான 1 கொரி 14:1,2** வசனத்துக்கு விளக்கத்தை கூறி - **வரங்களுக்கும் - அடையாளத்துக்கும்** உள்ள வித்தியாசங்களைக் குறித்து எழுதுவேன் என்று கர்த்தருக்குள் நம்புகிறேன்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

## குறிப்பு:

**மீதி விவரங்கள் அடுத்த மாத ஜாமக்காரனில் தொடரும்...**

அந்நியபாஷையைப்பற்றி தொடர்ந்து ஒவ்வொரு மாதமும் ஜாமக்காரனில் எழுதுவது சிலருக்கு மிகுந்த சலிப்பை உண்டாக்கிறது.

ஆகவே **அந்நியபாஷை பேசுவது தவறு** என்பதைக்குறித்து தெளிவு பெற்றவர்கள் சில மாதம் பொருமையாக இருங்கள்.

‘ இது **பெந்தேகோஸ்தே சபைகளில் உள்ள என் வாசகர்களுக்காகவே** எழுதுகிறேன். ஏற்கனவே பலமுறை துண்டுதுண்டாக அந்நியபாஷைப்பற்றி ஜாமக்காரனில் எழுதியுள்ளேன்.

ஆனால் இந்த முறை தொடர்ந்து எழுதுவது இதைக்குறித்து புத்தகமாக வெளியிடுவதற்காக **ஒரு முன்னோடியாக** இதை எழுதுகிறேன். தயவுசெய்து இன்னும் இரண்டு அல்லது மூன்று மாதங்கள் பொருத்துக்கொள்ளுங்கள்.

# மலேசியா:

2016 நவம்பர் மாதம் முதல் வாரம் மலேசியாவுக்கு கூட்டம் நடத்த தேதிகள் கொடுத்துவிட்டேன். மலேசியாவில் உள்ள மற்றவர்களுக்கு கூட்டம் நடத்த வேறு தேதிகள் இல்லை. மன்னிக்கவும்.

# ஆஸ்ட்ரோலியா

அப்படியே 2016 நவம்பர் மாதம் முழுவதும் ஆஸ்ட்ரோலியாவுக்கு மெல்போன் (மலையாளம் மற்றும் தமிழ்) சிட்னி - தமிழ் கூட்டங்களுக்கு தேதிகள் கொடுத்து முடித்துவிட்டேன். ஆகவே ஆஸ்ட்ரோலியாவில் உள்ள மற்ற மாநிலங்களுக்கு தேதிகள் கொடுக்க இந்தமுறை இயலவில்லை. மன்னிக்கவும்.

இந்த குறிப்பிட்ட நாடுகளில் வாழும் என் ஜாமக்காரன் வாசகர்கள் என் கூட்டம் நடக்கும் இடங்களுக்கு நேரில் வந்து சந்திக்கவும். ஆலோசனை பெறவும், ஜெபிக்கவும் தொடர்புக்கொள்ள வேண்டிய **தொலைபேசி எண்கள் மற்றும் இமெயில் ஐடி** கொடுத்துள்ளேன் விருப்பமானவர்கள் தொடர்புக்கொள்ளலாம்.

# கேள்வி – பதில்

# ஜாமக்காரனின் பதில்கள்

## இரட்சிக்கப்படவில்லை

**கேள்வி: என் கணவர் இரட்சிக்கப்படவில்லை. ஆனால் உங்கள் பத்திரிக்கையை தொடர்ந்து பக்கம் விடாமல் வாசிப்பார். பிரச்சனை என்னவென்றால் நீங்கள் அந்நியபாஷையைக்குறித்து எழுதியதை காப்பி எடுத்து பலருக்கு விநியோகித்து பெந்தேகோஸ்தே சபையை அவமானப் படுத்துகிறார். ஆகவே என் கணவருக்கு நீங்கள் அனுப்பும் ஜாமக்காரனை நிறுத்திவிடுங்கள்.**

***பதில்:*** *சகோதரி நீங்கள் யார்? என்பதை உங்கள் வேண்டுகோளிலிருந்து அறிந்துக்கொண்டேன். நீங்கள் **அந்நியபாஷை** பேசுகிறவர்கள் அல்லது பெந்தேகோஸ்தே சபைக்கு போகிறவர்கள் என்று உணரமுடிகிறது. அதனால் உங்களுக்கு என் ஜாமக்காரனை பிடிக்கவில்லை என்பதும் எனக்கு உணரமுடிகிறது. ஆகவே நீங்கள் உங்களை சோதித்து பாருங்கள். அந்த ஜாமக்காரனில் எழுதிய **அந்நியபாஷை** கட்டுரையை நீங்கள் வாசித்து நீங்கள் **பேசும் பாஷையை** நீங்களே பரிசோதனை செய்து பார்த்தால் உங்கள் **பொய்யான பாஷை** மாயையிலிருந்து நீங்கள் விடுவிக்கப்படுவீர்களே!.*

***இரட்சிக்கப்படாதவர்** என்று நீங்கள் கூறும் உங்கள் கணவர், பெந்தேகோஸ்தே சபை மக்களை **தெளிய வைக்கும் பணியை** அற்புதமாக செய்யும்போது, அதை ஏன் தடுக்குகிறீர்கள்? பெந்தேகோஸ்தே சபைக்கு நீங்கள் போவதால் மட்டுமே நீங்கள் **இரட்சிக்கப்பட்டிர்கள்** என்று கூறிவிட முடியுமா? அப்படி நீங்கள் உண்மையாக **இரட்சிக்கப்பட்டிருந்தால்** நான் எழுதியதை வசனத்தோடு ஒப்பிட்டு பார்த்து நீங்கள் **பேசும் பாஷை** என்ற **பொய்யை** உணர்ந்து உங்களை சரிப்படுத்திக்கொள்ளமுடியுமே!. சரியான இரட்சிப்பின் அனுபவம் பெற்ற ஒரு மனைவி **தன் கணவரை** பகிரங்கமாக **இரட்சிக்கப்படாதவர்** என்று மற்றவர்களிடம் கூறமாட்டார்களே!, அப்படி கூறுவதால் **அவமானம்** உங்கள் குடும்பத்துக்குதானே!. உங்கள் கணவர் உங்கள் சபையின் மாயமாலத்தை கண்டதாலும் உங்கள் **சாட்சி வீட்டில் சரியில்லை** என்பதாலும் உங்களோடு **பெந்தேகோஸ்தே சபைக்கு வருவதில்லை** என்று நினைக்கிறேன். ஆகவே உங்கள் உள்ளத்தில் மறைமுகமாக உங்கள் கணவரை **இரட்சிக்கப்படாதவர்** என்று கூறி பழி வாங்க தொடங்கியிருக்கிறீர்கள்.*

*ஆகவே நான் உங்களுக்கு கூறுவது என்னவென்றால் உங்கள் மனந்திரும்புதலில் தகறாறு இருக்கிறது. உங்கள் வீட்டில் ஜெபத்தில் உங்கள் கணவரோடு ஒரு மனதோடு ஜெபிக்க முடியவில்லை.*

*ஆகவே நீங்கள் சரியாக **மனந்திரும்புதலின் அனுபவத்தை** முதலில் நீங்கள் பெறுங்கள். உங்கள் சாட்சியை கணவர் காணட்டும்.*

*முதலாவது **இயேசுவை விசுவாசி** அப்போது **உங்கள் குடும்பம்(உங்கள் கணவர்)** இரட்சிக்கப்படும் என்றுதான் வேதம் உபதேசிக்கிறது.*

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

**கேள்வி: உங்கள் 52 வருட ஊழியத்தில் சுகமானவர்கள்,இரட்சிக்கப்பட்டவர்கள் ஏராளம் என்பதை நான் அறிவேன். என் வயது 82. உங்கள் வல்லமையான ஜெபம் மூலமாக தொடப்பட்டவர்களில் நானும் ஒருவன். ஆனால் நான் பலமுறை உங்கள் மூலமாக சுகம் பெற்றதை சாட்சி கடிதமாக உங்களுக்கு எழுதினேன். அவைகள் ஒன்றையும் நீங்கள் வெளியிட வில்லையே ஏன்? கர்த்தர் நாமம் சாட்சி மூலம் மகிமைப்படுவதை நீங்கள் நம்புவதில்லையா?**

**பதில்:** *ஐயா, உங்களை போல் என் கூட்டங்களில்* ***சுகம் பெற்றவர்கள், இரட்சிக்கப்பட்டவர்கள்*** *ஏராளம். மட்டுமல்ல, என்னை நேரில் காணாமல் என் கூட்டங்களில் கலந்துக்கொள்ளாமல் டிவியில், U-Tubeல் என் பிரசங்க செய்திகள் வருகிறதாம். அதை கேட்டு மனந்திரும்பியவர்களின் கடிதம் ஏராளமாக எனக்கு தொடர்ந்து வந்துக்கொண்டேயிருக்கிறது. ஒன்றை புரிந்துக்கொள்ளுங்கள்.* ***வல்லமை*** *என் ஜெபத்தில் அல்ல! - என் பிரசங்கத்திலும் அல்ல.* ***வல்லமை*** *என் ஜெபத்தை கேட்கிற* ***தேவனிடத்தில்தான்*** *இருக்கிறது.*

*அதைப்போல ஆவியானவர்* ***என்னை வல்லமையாக*** *உபயோகிக்கிறார் என்று நான் கூறமாட்டேன்.* ***எனக்குள் உள்ள ஆவியானவர்தான் அந்த வல்லமையான கிரியையைகளை செய்கிறார். நான் வெறும் கருவி மட்டுமே!.***

***சுகப்படுத்துகிற் இயேசு - நான் அவரால் உபயோகிக்கப்படும் கருவி அவ்வளவே?*** *கருவிக்கு* ***மதிப்பில்லை- வல்லமையில்லை.*** *கருவியாக என்னை உபயோகப்படுத்தும் கிறிஸ்துவுக்கே எல்லா* ***மகிமையும் கனமும்*** *உண்டாகவேண்டும். என் கூட்டத்தில் உங்களுக்கு கிடைத்த சுகத்துக்காக உங்கள் கடிதம் கிடைத்த வுடன் தேவனை துதித்தேன்.*

*நீங்கள் அனுபவித்த சுகத்தை மற்றவர்களுக்கு உங்கள்* ***வாய்மூலம், கடிதம்மூலம் இயேசு என்னை சுகமாக்கினார் என்று கூறி இயேசுவை மட்டும் மகிமைப்படுத்துங்கள்.***

*ஏசா 48:11* ***நான் கர்த்தர் என் மகிமையை நான் வேறு ஒருவருக்கும் கொடேன்.***

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

**கேள்வி: இயேசு விடுவிக்கிறார்,நாலுமாவடி கூடாராம் காலியாகிறது என்றும் பலர் அதிலிருந்து விலகிவிட்டதாகவும் கடந்த வருடம் ஜாமக்காரனில் வாசித்த ஞாபகம் உண்டு. இதில் சகோ.ரோஸ்லின்ரெக்ஸ் அவர்களுடன் இன்னும் சிலர் வெளியேறினார்கள் என்று நானும் கேள்விப்பட்டேன். ஆனால் சகோதரி.ரோஸ்லின் மறுபடியும் இயேசுவிடுவிக்கிறார் ஊழியத்தில் இணைந்துவிட்டமாதிரி தோன்றுகிறதே அவர் புகைப்படத்தை நான் விளம்பரத்தில் கண்டேன்.**

**பதில்:** *சகோதரி.ரோஸ்லின் அவர்கள் எனக்கு கடிதம் எழுதியிருந்தார்கள். அதில் தன்* ***புகைப்படத்தை*** *என்னை கேட்காமல் வெளியிடவேண்டாம் என்றும் எழுதியுள்ளார்கள். அதன்மூலம் அவர் என்மேல்கொண்ட வெறுப்பு புரிகிறது. அவர் புகைப்படம் வெளியிடுவதும்,வெளியிடாததும் பத்திரிக்கையாளனான* ***எனக்குள்ள உரிமையாகும். நல்ல செய்திக்கும் புகைப்படம் வெளியிடலாம், தவறான செய்திக்கும் புகைப்படம் வெளியிடலாம்.*** *அதை சகோ.ரோஸ்லினால் தடை செய்ய இயலாது என்றாலும் அவர் ஒரு நல்ல ஊழியக்காரி,* ***நாலுமாவடி இயேசுவிடுவிக்கிறார்*** *ஸ்தாபனத்திலிருந்து வெளியேறிவர்கள் கூட்டத்தில் அவர் பெயரும் காணப்பட்டது.*

*அவர் எனக்கு எழுதிய கடிதத்தில் அவருக்கு உண்டான கோபத்தில் தன் புகைப்படம் ஜாமக்காரனில் வெளிவரக்கூடாது என்றதால் படம் இல்லாமல் அவர் எழுதிய விளக்கத்தை எழுத எனக்கு பிரியம் இல்லை. இயேசுவிடுவிக்கிறாரில் ரோஸ்லின் நிலைப்பாடு என்ன? பிரச்சனையில்*

அவர் கணவரின் பங்கு என்ன? என்பதை அவர்களின் பத்திரிக்கையில் உள்ள அவரின் விலாசத்திலேயே கடிதம் மூலம் எழுதி அவரிடமே எழுதி விவரம் கேட்டுக்கொள்ளுங்களேன். சகோ.மோகன் சி.லாரசஸ் யாருக்கும் பதில் எழுதாததைப்போல் அல்ல. இவர் நிச்சயம் உங்களுக்கு பதில் எழுதுவார். அவர் உடல்நிலைக்காக ஜெபித்துக்கொள்ளுங்கள். அவரைப்போல் தாலந்து பெற்ற பெண்கள் மிகவும் குறைவு. ஆகவே அவரின் சுகத்துக்காக ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்.

❖❖❖❖❖❖❖❖

**கேள்வி: ஆமென் என்று கூறுவது ஆசீர்வாதம்தானே!. அப்படியிருக்கும்போது உங்கள் செய்தியில் ஆமென் ஆமென் என்று கூறுகிறவர்களைப்பற்றி கிண்டலும், நக்கலுமாக பேசுகிறீர்களே?**

**பதில்:** ***ஆமென் என்றால் ஆசீர்வாதம்*** *என்று உங்களுக்கு சொல்லிக்கொடுத்தவர் யார்? நீங்கள் எல்லாரும் இத்தனை ஞானசூன்யமாகவா இருக்கிறீர்கள்!.*

***ஆமென் என்றால் அப்படியே ஆகக்கடவது என்று அர்த்தம் ஆகும்.***

***மேலும் எபிரேயர்கள் ஒரு வார்த்தையை உறுதிப்படுத்த ஆமென், ஆமென் - மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்கு சொல்லுகிறேன்*** *என்று கூறுவார்கள். அது அவர்கள் வழக்கம்.*

*அர்த்தம் தெரியாமல்* ***ஆமென், அல்லேலுயா இயேசுவின் இரத்தம் ஜெயம்*** *என்று இப்படி கூறும் பெரிய பெரிய பாஸ்டர்மார்கள், மேடை ஊழியர்கள் இப்போது பெருகிவிட்டார்கள். என்ன செய்ய? இவர்களை நம்பவும் உங்களைப்போன்ற பெரும் கூட்டம் இருக்கிறார்களே?*

*டிவி நிகழ்ச்சியில் ஆமென் என்ற வார்த்தையை அடிக்கடி கூறுபவர்கள்* ***அல்லேலுயா*** *என்ற வார்த்தையை அடிக்கடி கூறுபவர்கள் யார் என்று கணக்கெடுத்து பாருங்கள். மிக ஏராளமானவர்களாக இருக்கவேண்டும்.*

***பாஸ்டர்.டி.மோகன்(AOG தலைமை பாஸ்டர்)*** *அவர்கள்* ***ஆராதனையை டிவியில்*** *சில வேளைகளில் கவனிப்பேன். அதை பார்க்கும்போது அவர் சபை மக்கள்மேல்தான் எனக்கு பரிதாபம் தோன்றுகிறது. மோகன் அவர்கள் தன் 30 நிமிட பிரசங்கத்தின் இடையே 3 நிமிடத்துக்கு ஒருமுறை எல்லாரும்* ***அல்லேலுயா*** *சொல்லுவோம் என்கிறார். அடுத்த 3 நிமிடத்தில் இரண்டாவது நிமிடமே* ***இரண்டு கைகளையும்*** *தூக்கி தேவனுக்கு நன்றி கூறுவோம் என்று கூறுகிறார்.*

*அந்த சபை மக்களும் குரங்காட்டி குட்டிக்காரணம் போடு ராமா என்றால் குட்டிக்காரணம் போடும், பழனிக்கு காவடி எப்படி எடுப்பே? என்றால் உடனே* ***இரண்டு கைகளும்*** *தூக்கி கூட்டத்தை சுற்றி சுற்றி வரும். இதே நிலைதான் இன்று சின்னமலை ஏஜி சபையின் நிலை. எத்தனை முறை கை தூக்கி ஸ்தோத்திரம் சொல்வார்கள். இதுபோதாதென்று* ***இரண்டு கைகளும் தூக்கி துதியுங்கள்*** *என்று கூறுகிறார். இப்படி ஒவ்வொரு 3 நிமிடத்துக்கும் பாஸ்டர் கூறிக்கொண்டேயிருப்பதால் மக்கள் சலித்துப்போய் அடபோய்யா? என்று கூறுவதுபோல யாரும் கைகளை தூக்கவதேயில்லை. அதையும் கவனித்தேன்.*

*பிரசங்கத்தில் அடுத்த வார்த்தை என்ன சொல்ல வேண்டும் என்பதை யோசிக்கவும், தான் எழுதிய பிரசங்க குறிப்பை பார்க்கவும் சபை ஜனங்களை இப்படி டிரில் வாங்குகிறார். இதில் ஆண்டவர் மகிமைப்படுவாரா? பரிதாபம், மிகப்பரிதாபம்.*

*இவருடைய சபை அங்கத்தினர்களே என்னிடம் மேலே கூறிய விவரங்களை சுட்டிக்காட்டி சலித்துபோய் கூறினார்கள். அப்படி கூறியவர்களிடம் இவ்வளவு சலுப்புடனே பேசுகிறீர்களே பிறகு ஏன் அங்கு போகிறீர்கள் என்றேன்.* ***சின்னமலை AOG சபை போகிறோம்*** *என்றாலே ஒரு கவுரவம் உண்டு. இந்த மாதிரி வரட்டு* ***கவுரவம் AOG சபை விசுவாசிகளிடம் மட்டுமல்ல, சி.எஸ்.ஐ***

**சபைகளிலும் உண்டு.** குடியிருக்கும் வீட்டுக்கு அருகிலேயே பெரிய சிஎஸ்ஐ ஆலயம் உண்டு. அங்கும் இவர்கள் மெம்பராக இருப்பார்கள். அதே சமயம் நாங்கள் இந்த சபை மெம்பர்தான். ஆனால் எல்லா வாரமும் பாளையங்கோட்டை **ஊசிகோபுரம் CSI ஆலயத்துக்குதான் போவோம்** என்று கூறி பெருமைப்படுவோர் உண்டு..

நாகர்கோவில். **வடசேரி** சிஎஸ்ஐ சபை மெம்பர்கள்தான் நாங்கள்!. ஆனால் எல்லா வாரமும் கல்லுகோயிலுக்கு (Home Chruch)தான் போவோம். எங்கள் பிள்ளைகள் கல்யாணம் எல்லாம் அந்த மாதிரி ஆலயத்தில்தான் நடத்துவோம் என்று கூறி தங்கள் **வரட்டு கவுரவத்தை வெட்கப்படாமல்** பலர் கூற கேட்டிருக்கிறேன்.

இப்படிப்பட்ட விஷயங்களில் பெருமைப்பட்டுக்கொள்ளும் கிறிஸ்தவ கூட்டம் எல்லா சபைகளிலும் உண்டு.

இவர்களெல்லாம் இரதங்கள்மேலும், குதிரைகள்மேலும் பெருமை பாராட்டுபவர்கள் என்று வேதம் கூறுகிறது.

❖❖❖❖❖❖❖❖❖❖

# என் வெளிநாட்டு ஊழியங்கள்:

| நாடு | தொடர்புக்கொள்ள | தொலைபேசி |
|---|---|---|
| **MALAYSIA**<br>2016 NOV 1 to 6 | Rev.HENDRY | 192224410 |
| **AUSTRALIA**<br>2016 NOV 9 to 13 | Mr.JAYAN CHRISOSTOM<br>**(MALAYALAM)** - MELBOURNE | 409809002 |
| 2016 NOV 17 to 20 | Bro.VINO APPATHURAI<br>(**TAMIL)** - MELBOURNE) | EMAIL.<br>VINOJIT@YAHOO.COM.AU |
| 2016 NOV 23rd to 29th | Bro.JOHN CUMARASAMY<br>(**TAMIL**) - SYDNEY | +6148962911<br>EMAIL-JCMARASAMY<br>@OPTUSNET.COM.AU |

## குறிப்பு:

**தனிப்பட்ட ஆலோசனைக்கும்** (Councilling)**, ஜெபத்துக்கும் வேத வசன சந்தேகங்கள் கேட்பதற்கும், மேலே குறிப்பிட்ட தொலைபேசியில் உள்ள மலேசியா மற்றும் ஆஸ்ட்ரேலியா நபரோடு தொடர்புக்கொண்டு நீங்கள் என்னை சந்திக்க விரும்பும் நாள், நேரம் ஆகியவைகளை உறுதிப்படுத்திக்கொள்ளவும். அங்கு உங்களுக்காக ஆலோசனையும், வேதவசன விளக்கமும் உங்களுக்கு கொடுத்து உங்களுக்காக ஜெபிக்கப்படும்.**

# SOUTH KERALA - CSI DIOCESE VENGAPOTTA CSI CHRUCH 50th CONVENTION







தெற்கு கேரளா டையோசிஸ் **வேங்கபோட்டா** சிஎஸ்ஐ சபையின் ஆண்டுவிழா வெகு விமர்சையாக நடந்தது. தெற்கு கேரளா டையோசிஸ்ஸின் பிஷப் **Rt.Rev.A.Dharmaraj Rasaalam** அவர்கள் சபை ஆண்டுவிழாவை தொடங்கி வைத்தார். சாதாரணமாக ஆண்டு விழாவை தொடக்கி வைக்கும் பிஷப்மார்தான் அன்றைய பிரதான பிரசங்கியாக பிரசங்கிப்பார். ஆனால் அவர் அருகில் அமர்ந்திருந்த என்னை இன்று நீங்கள்தான் பிரசங்கம் செய்யவேண்டும் என் பிரசங்கத்தை இவர்கள் பலமுறை கேட்டிருக்கிறார் கள். உங்கள் பிரசங்கத்தை கேட்டு 30 வருடங்கள் ஆகிறது. நான் ஆந்திராவில் மிஷனரியாக இருந்த போது நீங்கள் மெடிக்கல் கேம்ப் நடத்தி 3 நாள் கிராம ஜனங்களுக்கு செய்தியளித்தீர்கள். இன்று நீங்கள் நீண்டநேரம் பேச வேண்டும். இன்று திருவிருந்து இல்லை. உங்கள் பிரசங்கம் முடித்தவுடன் நேராக விருந்து சாப்பிடத்தான் போக போகிறோம். ஆகையால் நீங்கள் நீண்டநேரம் பேசவேண்டும் என்று கூறியது என்னை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. பிஷப் அவர்களைப்பற்றியும், தேர்தல் சமயத்தில் காரில் கோடிகள் கொண்டுபோய் தேர்தல் அதிகாரிகளிடம் பிடிப்பட்டதையும் காரக்கோணம் மெடிக்கல் காலேஜ் பண ஊழல்பற்றியும் குறிப்பிட்டு பிஷப்பை தாக்கி எழுதிய என்னை இவ்வளவு மரியாதையாக உபசரித்து என்னை நீண்ட நேரம் பிரசங்கம் செய்யவேண்டும் என்று கேட்டது அதிர்ச்சியை மாத்திரம் அல்ல- ஆச்சரியத்தையும் உண்டாக்கிறது. உடனே பிஷப்பே மைக்மூலம் என்னை புகழ்ந்து பேசும்படி அழைத்தார். நானும் நீண்டநேரம் பிரசங்கித்தேன்.

சபை ஊழியர். **கிறிஸ்டோபர்** அவர்கள் கூட்ட ஏற்பாடுகளை மிகவும் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார். அதை தொடர்ந்து 3 நாள் கன்வென்ஷனிலும் நான் பிரசங்கித்தேன். கர்த்தரின் நாமம் மகிமைப்பட்டது. வியாதியஸ்தர் பலர் ஜெபிக்க வந்தனர். பலர் மனந்திரும்பினார்கள். கடைசி நாள் வியாதியஸ்தர்களுக்காக விசேஷ ஜெபம் செய்தேன். கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக.

# UTHANGARAI CALVARY EVANGELIGAL CHURCH
# 27th ANNUAL DAY CONVENTION

27 வருடத்துக்குமுன் இலங்கையிலிருந்து இடம் பெயர்ந்து இயேசுவை ஏற்றுக்கொண்டு ஊத்தங்கரைக்கு வந்து சேர்ந்தவர்களுக்கு கட்டப்பட்ட ஆலயம் தான் CEC ஆலயம் ஆகும்.

இலங்கை கிராமத்தில் நான் நடத்தின கூட்டத்தில் இயேசுவை ஏற்றுக்கொண்ட மக்கள் ஏராளம். அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து இலங்கையில் உள்ள சபையில் அவர்களை இணைந்து அங்கு ஆராதித்து வந்தனர். அதில் நான் ஞானஸ்நானம் கொடுத்தவர்களில் 7 குடும்பங்கள் இலங்கை கலவரத்துக்கு முன்பாகவே இந்தியா வந்துசேர்ந்தனர். அவர்களை நமது தமிழ்நாட்டில் **ஊத்தங்கரை** அகதிகள் முகாமில் குடியிருக்க வைக்கப்பட்டனர். இந்த 7 குடும்பங்களுக்காகவும், ஊத்தங்கரையில் செய்த ஊழியத்தின் பலனாக இயேசுவை ஏற்றுக்கொண்ட வேறு சில குடும்பங்களுக்காகவும் இவர்களெல்லாரும் ஆராதிப்பதற்காக கட்டப்பட்ட சபைதான் CEC சபை ஆகும். என் குடும்பத்தினர், ஆவிக்குரிய நண்பர்கள் குறிப்பாக டாக்டர்.**டேனியல்** குடும்பத்தினர் இப்படி பலரிடம் பணஉதவி பெற்று நான் கட்டி கொடுத்த ஆலயம்தான் **கல்வாரி இவாஞ்சிலிக்கல் சர்ச்**(CEC) ஆகும்.

கன்னியாகுமரிக்கு நானே நேரில் சென்று இந்த ஆலயத்திற்கு பாஸ்டராக அழைத்து வந்தவர் பாஸ்டர்.**ஹாரிஸ்ஜோசப்** அவர்களாகும். 3 லட்சம்ரூபாய்க்கு **தேக்கு மரத்தை** பொள்ளாச்சியிலிருந்து வாங்கி லாரிமூலம் ஊத்தங்கரை கொண்டுவந்து சேர்த்து இந்த பாஸ்டர் மூலமாக ஆலய கட்டுமான வேலையை தொடங்கினேன். ஆனால் பாஸ்டர்.ஹாரிஸ் அவர்கள் என் எண்ணத்தின்படி சபையை நடத்தவில்லை. அந்நியபாஷையில் சபையினரை பேச வைத்தார். **அம்மாவாசை** இரவு **பிசாசுகளை** துாரத்துவதாக **மந்திரவாதிபோல்** செயல்பட்டார். அப்போதே இந்த பாஸ்டர் வசனகொள்கைக்கு ஒத்துவரவில்லை என்று அறிந்தேன். அதோடு மிகப்பெரிய பணஊழல் செய்து என் மனதை மிகவும் நோக செய்துவிட்டார். **3 லட்சம்** ரூபாய்க்கு நான் வாங்கிப்போட்ட தேக்கு மரங்களை எல்லாம் **2 லட்சத்துக்கு** இரகசியமாக விற்று அதற்கு மாற்றாக காட்டு மரங்களை வாங்கி அவசரஅவசரமாக அந்த மரத்துக்கு பெயின்ட் அடித்து, ஆலய கட்டுமான் வேலையை முடித்துவிட்டார். இவ்வளவு லட்சம் பண மோசடி செய்த அவரை, ஊத்தங்கரை முன்சீப்பை வரவழைத்து அவரிடம் விவரம் அறிவித்து அவர் முன்னிலையில் பாஸ்டர்.ஹாரிஸ்யிடம் ஒப்புதல் **வாக்குமூலம்** வாங்கி அவர் கையில் பணமும் கொடுத்து **கன்னியாகுமரிக்கே** திருப்பி அனுப்பிவிட்டேன்.

**அந்நியபாஷை,தீர்க்கதரிசனம்,பிசாசு விரட்டுதல்** போன்ற காரியங்கள் சபை மக்களை கவர்ந்தன. ஆனால் அவர் மாய்மாலத்தையும்,பண ஊழலையும் சபைக்கு பகிரங்கப்படுத்தி ஊழியக்காரனை அவமானப்படுத்த விரும்பாமல் எப்படியோ அவரை வெளியேற்றிவிட்டேன்.

அதன்பின் பல பாஸ்டர்கள் தற்காலிகமாக ஆராதனை நடத்த ஏற்பாடு செய்து முடிவாக, FMPBமிஷனரி ஸ்தாபனத்தினரின் வேண்டுகோள்படி **Rev.தாமஸ்** அவர்கள் தலைமையில் ஊத்தங்கரை ஆலயத்தை தற்காலிகமாக FMPB நடத்திக்கொள்ள ஏற்பாடு செய்தேன். சுமார் 10 ஆண்டுகள் பிரச்சனையில்லாமல் FMPB சபையை நடத்தி சென்றனர். FMPB கொள்கை மாற்றம் காரணமாக வெல்லுார் CSI டையோசிஸ்க்கு கிருஷ்ணகிரி,தர்மபுரி மாவட்ட FMPB சபைகளை ஒப்படைத்தனர். அதன் காரணமாக FMPBயிடமிருந்து ஊத்தங்கரை சபையை நானே மறுபடியும் பொருப்பெடுத்து நடத்த ஆரம்பித்தேன்.

பிறகு **Rev.இஸ்ரவேல் ஜெயராஜ்** அவர்களிடம் சபை ஆராதனை நடத்த ஒப்படைத்தேன். சுமார் 5 வருடங்கள் நன்றாக சபையை நடத்திக்கொண்டு வந்தார். இவர் காலத்தில்தான் ஆலய காணிக்கை **வரவு-செலவுகள்** கம்பியூட்டர் வழியாக ஒழுங்கப்படுத்தி **ஆடிட்டர்** பார்வைக்கு அனுப்பி **ஆடிட்டர் ரிப்போர்ட்** வாங்கி **மனிதர்களுக்கு** முன்பாகவும், **அரசாங்க** சட்டப்படியும் **கர்த்தரின் பார்வையிலும்** கணக்குகள் ஒழுங்குப்படுத்தப்பட்டன. சரீர பலவீனம் காரணமாகவும்,வேறு சில காரணமாகவும் Rev.இஸ்ரவேல் ஜெயராஜ் அவர்கள் ஓய்வுபெற்றதால் தன் சொந்த ஊர் போய்சேர ஏற்பாடு செய்தேன். அவர் காலத்திலேயே புதிய பாஸ்டராக **பாஸ்டர்.அழகரசன்** அவர்களை நியமித்தேன்.

இனி வசனத்தின்படியும், என் எண்ணத்தின்படியும் சபை உபதேசங்களை சபை மக்களுக்கு அறிமுகப்படுத்தினேன். பழைய உபதேசத்தில் பல வருடங்களாக பழக்கப்பட்டுபோன சபை மக்களில் பெரும்பாலோர் வசன அடிப்படையில் நான் கட்டளையிட்ட சபை சட்ட திட்டங்களை விரும்பாததால் அப்படிப்பட்டவர்களை நானே சபை பொருப்பிலிருந்து நீக்கினேன். சபை செயலரும் தானாகவே **சபையிலிருந்தும்,சபை பொருப்பிலிருந்தும்** விலகி கடிதம் மூலமும் சபைமக்களிடமும் **பகிரங்கமாக** அறிவித்து வெளியேறினார். இப்படியாக பழைய சபை அங்கத்தினர்களில் பெரும்பாலோர் சபையை விட்டு விலகி வேறு சபைகளில் போய் தங்களை இணைத்துக்கொண்டனர்.

இப்போது புதிய **பாஸ்டர்.அழகரசன்** மூலமாகவும்,உதவி ஊழியர் மூலமாகவும் புதிய ஆத்துமாக்கள் மளமளவென்று சபையில் சேர்ந்து நிறைத்தனர். மே மாதம் 58 பிள்ளைகளுடன் VBS வெற்றிகரமாக நடத்தப்பட்டது.




**ஊத்தங்கரை CEC சபையின் முகப்பு தோற்றம்.**

இப்போது 27வது ஆண்டு விழாவும் மிக சிறப்பாக நடந்தேறியது. ஆண்டுவிழாவுக்கு வந்தவர்கள் சபைக்கும் உள்ளேயும்,சபைக்கு வெளியேயும் நிரம்பி வழிய ஆண்டுவிழா ஆசீர்வாதத்துடன் நடந்தேறியது. ஆண்டுவிழாவில் சிறுவர்களின் சிறப்பு நிகழ்ச்சிகள் நடந்த 56 சிறுவர்,சிறுமியருக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. முடிவில் நடந்த பெரிய விருந்தில் வந்த அனைவரும் பங்கு கொண்டனர். கர்த்தருக்கே மகிமை உண்டவதாக.

இவர்களுடன் ஊத்தங்கரை போலீஸ் இன்ஸ்பெக்டர் ஆண்டுவிழாவுக்கு இரண்டுமுறை வந்து பார்த்து வாழ்த்துகள் கூறிப்போனார். அவருக்கு சபை விசேஷ வாழ்த்து கூறி அவருக்காக, காவல் துறையினருக்காக விசேஷ ஜெபம் சபையில் ஏறெடுக்கப்பட்டது.

அரசாங்க அதிகாரிகள் தாசில்தார் மற்றும் ரெவின்யு அதிகாரிகள் யாவரும் தங்கள் வாழ்த்துக்களை பாஸ்டரிடம் அறிவித்துள்ளார்கள். அவர்களுக்காகவும் ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. கீழ்காணும் புகைப்படங்கள் முழுவதும் 2016 ஜீலை 17ம் தேதி 27ம் ஆண்டு விழாவில் எடுக்கப்பட்ட படங்களாகும்.

இத்தனை சிறப்பாக ஆண்டுவிழா வெற்றி பெற அரும்பாடுபட்ட சபை பாஸ்டர்.**அழகரசனுக்கும்,** அவர் குடும்பத்தினருக்கும் நிர்வாகி என்ற முறையில் நன்றி கூறுகிறேன்.

CEC சபையில் சகல ஏற்பாடுகளுக்கும் நல்ல ஆலோசனை கூறி எனக்கு வலதுகை போல் உதவிய **Rev.தேவசுந்தரம்** அவர்களுக்கும் நன்றி கூறுகிறேன். கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக.



CEC சபை கவுரவசெயலர் **Rev.தேவசுந்தரம்,**

நிர்வாகி.**டாக்டர்.புஷ்பராஜ்,**

புதிய **பாஸ்டர்.அழகரசன்**









**நிர்வாகி டாக்டர்.புஷ்பராஜ் அவர்கள் ஜெபிக்க வந்த பலருக்கும் ஜெபம் செய்து அனுப்பினார்.**



**ஆண்டுவிழாவிற்கு வந்த அந்த பகுதி கவுன்சிலர் அவர்கள் கவுரவிக்கப்பட்டார்.**

**திருப்பத்துார் CSI சபை செயலர் அவர்கள் கவுரவிக்கப்பட்டார்.**



**இப்படியாக 27வது ஆண்டுவிழா CEC சபையில் மிகவும் சிறப்பாக கொண்டாடப்பட்டது. தேவனுக்கே மகிமை உண்டாவதாக.**

# வாசகர் கடிதம்:

## ஜாமக்காரனில் பிழை திருத்தம்செய்ய ஏற்பாடு செய்யுங்கள்:

## ஜூன் மாதம் 2016 ஜாமக்காரனில் கண்ட பிழைகள்:

| | | |
|---|---|---|
| **பக்கம் 3 - மாநிலம்** | - Provence | - **Povince** |
| **பக்கம் 12 - வேத வியாக்கியானங்கள்** | - Comentry | - **Commentary** |
| **பக்கம் 17 - தீ ஜுவாலை** | - Flam | - **Flame** |

## TRICHY - TANJORE CSI DIOCESE
## KUMBAKONAM CSI CHURCH CONVENTION

அநேக ஆண்டுகளுக்கு பிறகு கும்பகோணம் சிஎஸ்ஐ ஆலய கூட்டத்தில் பிரசங்கித்தேன். சபை ஆயர்.**Rev.சார்லி பென் சாந்தகுமார்** அவர்கள் சிறப்பான வரவேற்பு கொடுக்க கர்த்தரின் செய்தியை பகிர்ந்துக்கொண்டேன்.

இதை ஒட்டி பிரபல டாக்டர்.மஹானி அவர்களின் மறைவுக்கு பின் ஓர் ஆண்டு நிறைவு ஸ்தோத்திர கூட்டத்திலும் கர்த்தரின் செய்தியை பகிர்ந்துக்கொண்டே கும்பகோணம் சிஎஸ்ஐ,லூத்தரன்,பெந்தேகோஸ்தே இப்படி அனைத்து சபை பாஸ்டர்களும்,மக்களும் திரளாக கலந்துக்கொண்டனர். ஒவ்வொரு கிறிஸ்தவனும் அறியவேண்டிய மிக முக்கியமான செய்தி பகிர்ந்துக்கொண்டபோது பெய்த பெரும் மழையை கூட்டம் முடியும்வரை கர்த்தர் தடுத்து மக்கள் செய்திகேட்க உதவினார்.இக்கூட்டங்களில் ஆவியானவர் என்னை மிகச்சிறப்பாக பயன் படுத்தினார். மக்களும் ஆவலுடன் கர்த்தரின் வசனங்களை கேட்டார்கள். 3நாள் கன்வென்ஷன் கூட்டங்களும் மிகவும் ஆசீர்வாதமாக நடந்தது. தேவனுக்கே மகிமை உண்டவதாக.

## மொபைலில் பேலன்ஸ் இல்லாமல் என்னிடம் பேசமுயலவேண்டாம்:

பலர் ஆலோசனை கேட்கவும், வியாதிக்காக ஆலோசனை பெற்று ஜெபிக்கவும் **மொபைலில்** என்னோடு தொடர்புகொள்கிறார்கள்.

வேத வசன ஆலோசனைக்கூறி, வைத்திய ஆலோசனையும் கூறி மொபைல் வழியாக ஜெபிக்க தொடங்கியவுடன் அவர்களின் மொபைல் துண்டிக்கப்படுகிறது. அதை அறியாமல் முழு ஜெபத்தையும் நான் கண்ணைமூடிக்கொண்டு ஜெபித்துவிடுகிறேன். ஜெபம் முடிந்தபின் ஆமென் சொல்ல எதிர்பக்கம் சத்தம் இல்லை. பிறகுதான் எப்போதோ அவர்கள் மொபைல் கட் ஆகியிருப்பதை அறியமுடிந்தது. மன்னிக்கனும் டாக்டர், **மொபைலில் பணம்** தீர்ந்துவிட்டது. மறுபடியும் பணம்போட்டு பேசுகிறேன். தயவுசெய்து மறுபடியும் ஜெபம் செய்யுங்கள் என்று கூறும்போது எனக்கு கோபம் வருகிறது. ஆனாலும் ஊழியக்காரன் நான் கோபப்படகூடாது. ஆகவே அவர்களுக்கு ஆலோசனையாக இனி மொபைலில் பணம் இருக்கிறதா என்பதை கவனித்தபின் என்னோடு பேசுங்கள். இப்போது மறுபடியும் ஜெபிக்க இயலாது. ஜெபம் கர்த்தருடன் பேசுவது, உங்களுக்காக நான் ஜெபித்துவிட்டேன். கர்த்தரும் ஜெபத்தை கேட்டார். ஆகவே இனி உங்கள் காதுகள்கேட்க ஜெபிப்பது வீண். பலர் ஜெபத்துக்காக காத்திருக்கிறார்கள் என்று கூறி தொலைபேசியை வைத்துவிடுகிறேன்.

ஆகவே தொலைபேசியில் தொடர்புகொள்கிறவர்கள் நான் மேலே கூறிய ஆலோசனையை கவனித்து என்னோடு ஒத்துழைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். தயவுசெய்து ஜெபத்தை அலட்சியம் படுத்தும் விதத்தில் தொலைபேசியில் **பணம்(பேலன்ஸ்)** இல்லாமல் என்னிடம் பேச முயலவேண்டாம்.

**செய்திகள்! செய்திகள்!!**

# (கள்ள தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள்)

## சகோ.மோகன் சி.லாசரஸ் அவர்கள் 2016 ஜனவரி மாதம் அளித்த தீர்க்கதரிசனம்:



' **தமிழ்நாடு அரசியலில் அநேக ஆச்சரியங்கள் அரங்கேறும் .லூக்கா 1:51,52.**

' **அரசியல்வாதிகள் மீதும் தேவனுடைய நியாயத்தீர்ப்பு வெளிப்படும. மக்களை ஏமாற்றி ஊழல் செய்து, அநீதியாய் செயல்பட்டவர்கள் வெட்கத்திற்கு உள்ளாவார்கள் என்று கர்த்தர் சொல்கிறார்.**

' **தமிழ்நாட்டில் ஒரு ஆசீர்வாதமான ஆட்சி அமையும் என்று ஆண்டவர் வாக்குக்கொடுத்திருக்கிறார்.மேலே வாசித்தவை மோகன் சி.லாசரஸ் அவர்கள் கூறிய பொய் தீர்க்கதரிசனம்.**

## மோகன் சி.லாசரஸ் தீர்க்கதரிசனம் நிறைவேறினதா?

**1. தமிழ்நாடு அரசியலில் அநேக ஆச்சரியங்கள் அரங்கேறும் ஜனவரி மாதம் முதல் ஆகஸ்ட் மாதம்வரை ஒரு ஆச்சரியமும் அரங்கேறவில்லையே!**

**2. ஆளும் கட்சிதான் இந்த முறையும் ஜெயித்தது. ஆனால் தேவனுடைய நியாயதீர்ப்பு என்று எதுவும் இவர்கள் யாருக்கும் இதுவரை நிகழவில்லையே!. எல்லா மந்திரிகளும் சீரும், செழிப்புமாக,குனிந்த முதுகைகூட இன்னும் நிமிர்த்தாமல் கோடிகள் சேர்த்ததை லஞ்ச ஒழிப்பு போலீஸ் கண்டுபிடித்துள்ளதே,கண்டுபிடித்து கொண்டிருக்கிறார்களே! இதுவா ஆசீர்வாதமான ஆட்சி.**

**3. தமிழ்நாட்டில் ஒரு ஆசீர்வாதமான ஆட்சி அமையும் என்று மோகன் சி.லாசரஸ்க்கு மட்டும் கர்த்தர் தனியாக வாக்கு கொடுத்திருக்கிறராம்.இவர்கள் ஆட்சி அமைத்த நாளிலிருந்து இப்படிப்பட்ட பொய் தீர்க்கதரிசிகள் வருடாந்திர தீர்க்கதரிசனம் என்ற பெயரில் கூறுவதை தொடர்ந்து நம்புகிற கிறிஸ்தவர்கள் இருக்கும் வரை இப்படிப்பட்ட பொய் தீர்க்கதரிசிகள் செழித்து கொண்டேயிருப்பார்கள்.**

' **எத்தனை கொலைகள், ரயில்வே ஸ்டேஷனில் எல்லாரும் பார்க்க கழுத்தறுத்து செய்யப்பட்ட கொலை. ஒரு வாரத்துக்குள் தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் 16 கொலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. நீதிமன்றத்துக்குள் புகுந்து பட்டப்பகலில் வக்கீல் கொலை செய்யப்பட்டது. குற்றம் செய்யாத தகப்பன்-மகன் இருவரையும் 3 போலீஸ்காரர்கள் தடிகளால் குரூரமாக கதறகதற அடித்து நொருக்கிய காட்சிகள். வாட்ஸ் அப்பிலும்,டிவியிலும் காட்டியது மக்களை கண்கலங்கவைத்தது. மனித உரிமை சங்கத்தினர் தலையிட்டும் பொதுமக்கள் வாகனங்களை தடைசெய்து தங்கள் எதிர்ப்பை தெரிவித்ததால் நீதிமன்றம் தலையிட்டு அடித்த போலீஸ்காரர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டனர். காவல் ஒழுங்கு-சட்டம் எங்கும் யாவும் நீங்கிப்போன நிலையில் தமிழகம் தள்ளதளித்துக்கொண்டிருக்கிறது. ஆனால் மோகன் சி.லாசரஸ் அவர்கள் கர்த்தர் கூறினாராம். தமிழ்நாட்டில் ஆசீர்வாதமான ஆட்சி அமையும். அநேக ஆச்சரியங்கள் நிறைவேறும் என்றெல்லாம் எழுதியிருக்கிறார். இதை வாசிக்கும்போது கர்த்தர் பொய் சொன்னாரா? மோகன் சி.லாசரஸ் பொய் சொன்னாரா?**

# கிருபாசனம் பாஸ்டர்.சாது தாசையா அவர்கள் கர்த்தருக்குள் நித்தியடைந்தார்.



கிருபாசனம் சபை உதவி ஸ்தாபகரும்,நல்ல வேத ஞானம் உள்ளவருமான பாஸ்டர்.சாது தாசையா அவர்கள் 15ஏப்ரல் 2016ல் அன்று நித்தியத்துக்கு உயர்த்தப்பட்டார்.

கிருபாசனம் சபையின் ஆரம்ப ஸ்தாபகர்.கஞ்சிரக்கோடு சாது ஏசுதாசன் அவர்களாகும். அதிகம் படிப்பு இல்லாத சாது ஐயா அவர்கள் செருப்பு இல்லாத காலிலே பல மைல்கள் நடந்து வழி நெடுக இயேசுவை அறிவித்து அதன்மூலம் அவர் சம்பாதித்த ஆத்துமாக்கள் ஏராளம். கன்னியாகுமரி மாவட்டம் முதல் ராமநாதபுரம் வரை ஐயா அவர்கள் மூலமாய் ஸ்தாபிக்கப்பட்ட சபைகள் ஏராளம். சபைகள் பெருகினபோது அதை நிர்வாகம் செய்ய படித்த ஒரு பாஸ்டராக சாது தாசையா அவர்கள் சாது ஏசுதாசன் அவர்களுடன் இணைந்தார். அதன்பின் காஞ்சிரகோடு (கன்னியகுமாரி மாவட்டம்) என்ற இடத்தில் சபை கட்டிடங்களும் உபவாச ஜெபமண்டபங்களும் எழும்பின.

ஆரம்ப காலங்களில் சாது ஏசுதாசன் அவர்களோடு எனக்கு நல்ல நெருக்கம் இருந்தது. நல்ல ஆவிக்குரிய அனுபவம் உள்ளவர் சேலத்தில் அவரை அழைத்து ஒரு கூட்டமும் ஏற்பாடு செய்ய உதவினேன். அந்த கூட்டத்துக்கு பின் சேலம் அஸ்தம்பட்டியில் கள்ளிக்காடு என்ற இடத்தில் அரசு பஸ் டிப்போ அருகில் ஓலை குடிசையில் கிருபாசனம் சபை ஸ்தாபித்தார்.

சேலம் வரும்போது என் வீட்டிலும் ஒருநாள் தங்கியிருக்கிறார். கன்னியாகுமரி மாவட்டம் காஞ்சிரக்கோடு என்ற இடத்தில் ஒவ்வொரு வருடமும் மிகப்பெரிய கன்வென்ஷன் நடத்துவார். யாரிடமும் காணிக்கை உதவி கேட்க மாட்டார். ஆனால் கன்வென்ஷன் நடக்கும் ஒரு வாரம் முழுவதும் கன்வென்ஷனில் கலந்துகொண்ட எல்லாருக்கும் சாப்பாடு பரிமரப்படும். சிஎஸ்ஐ விசுவாசிகள் கூட அந்த கன்வென்ஷனுக்கு அரிசி- பருப்பு இவைகளை மூட்டை கணக்கில் கொடுத்து உதவுவதை நான் கண்டிருக்கிறேன். ஒரே ஒருமுறை அவர்களின் வருடாந்திர கன்வென்ஷனில் பிரசங்கம் செய்ய அழைக்கப்பட்டேன். நான் சிஎஸ்ஐக்காரன் என்று அறிந்தாலும் தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் உள்ள சபை பாஸ்டர்கள் ஊழியர்களின் கூட்டத்தில் நான் பேசும்படி அழைக்கப்பட்டேன்.

அப்படியே சாது ஏசுதாசன் அவர்களின் மரணத்திற்குபிறகு கிருபாசனம் சபைகளின் பொருப்பு வகித்த சாது-தாசையா அவர்களும் என்னை ராமநாதபுரம் சபைக்கு அழைத்து நான்கு நாள் கன்வென்ஷன் நடத்தினார்.

பெந்தேகோஸ்தே சபைகளின் பாஸ்டர்களும்,சபைகளின் ஸ்தாபகர்களும் என்னையும், என் ஊழியத்தையும் என் தனிப்பட்ட வாழ்க்கையும் அறிந்துக்கொண்டதால் இவர்களின் சபை கூட்டங்களில் நான் பிரசிங்க்க தைரியமாக என்னை அழைத்து உபயோகித்தனர். மரித்த பாஸ்டர்.சாது தாசையா அவர்கள் வியாதி படுக்கையில் இருந்தபோது நான் அவரை பார்த்து ஜெபிப்பதற்க்கென்றே நேரில் சென்றேன். கடைசிவரை மருந்து உட்கொள்ளாமல் வாழ்ந்தவர். நான் டாக்டர் என்ற முறையில் சில இயற்கை மருந்துகளை கொடுத்தும் அதை ஏற்க மறுத்துவிட்டார். நான் உயிரோடு வாழ்ந்து கர்த்தருக்கு ஊழியம் செய்யவேண்டும் என்பதை தேவன் விரும்பினால் அவரே எனக்கு சுகம் கொடுப்பார். அப்படி அல்ல என்றால் அவரே என்னை எடுத்துக்கொள்ளட்டும் என்ற வைராக்கியத்தில் வாழ்ந்து மரித்தார். சாது தாசையா அவர்களின் வாழ்க்கைக்காக தேவனை துதிக்கிறேன்.

## வெளிநாட்டில் வாழும் வாசகர்கள் கவனிக்கவும்:

‘ வெளிநாட்டுக்கு அனுப்பும் ஜாமக்காரன் பத்திரிக்கையின் ஸ்டாம்ப் விலை மிக அதிகமாகிவிட்டதாலும் ஒரு ஜாமக்காரனுக்கு **51ரூபாய்,64 ரூபாய்** என்று ஸ்டாம்ப் ஒட்ட வேண்டியிருப்பதாலும் கம்பியூட்டர் வைத்திருப்பவர்கள் உங்கள் ஜாமக்காரனை PDFல் பெற்றுக் கொண்டு அதை டவுன்லோட் செய்து வீட்டில் உள்ள யாவரும் வாசிக்க முயற்சிக்கவும். மற்றவர்களுக்கும் நீங்கள் காப்பி எடுத்து கொடுத்து உதவவும் வேண்டுகிறேன். ஆகவே நீங்கள் எங்கள் **இமெயில்க்கு ஜாமக்காரனை அனுப்பவும்** என்று எங்களுக்கு எழுதினால் போதும். உங்கள் இமெயில் ஐடியை நாங்கள் குறித்துக்கொண்டு ஜாமக்காரனை **அச்சகத்துக்கு அனுப்பும் முன்பே** உங்களுக்கு **PDF வழியாக** அனுப்பிவிடுவோம். ‘ இதன்மூலம் லட்சக்கணக்கான ரூபாய்களுக்கு ஸ்டாம்ப் வாங்க செலவு செய்யாதபடி **எங்களுக்கு நீங்கள் உதவலாம்.** மற்றவர்களுக்கும் **ஜாமக்காரன்** தேவையானவர்களுக்கும் இதை அறிவியுங்கள். அவர்களுக்கும் PDF மூலமாக ஜாமக்காரனை அனுப்பி வைப்போம். ‘ இவ்விஷயத்தில் **உங்கள் ஒத்துழைப்பை மிகவும் நாடுகிறேன்.** வெளிநாட்டில் ஜாமக்காரன் **வாசிப்போர் எண்ணிக்கை மிகவும் அதிகமாக** பெருகிவிட்டது. ஒத்துழைக்கவும். - நன்றி.

**JULY 2016**

# Printed Book/Book Post

**Annual Subscription:**

| | |
|---|---|
| **India** | **- Rs.60/** |
| **Foreign** | **- Rs.600/** |

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.